www.tamilarangam.net

# சிந்தனை

புரட்டாசி 1989




SINTHANAI 4/89 July-Sept. 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாம்பல் மேட்டுச் சரிதம்.

கவிதாஞ்சலி.

அகிம்சை
போர்
விடுதலை
சோசலிசம்
என்றார்கள்

ஆனால்,
என்னவோ
உறவுகளை
நாம்தான்
சாம்பல் மேட்டுக்குள்
தினம்
தினம் தேடுகிறோம்!

திசை
புரியாத்தோணி
குறித்த இடம்
சென்றடையா!
புரிவார்கள்
புயலுக்குப் பின்
அவர்கள்
உறவுகளை....

அது வரைக்கும்
நாம்
கிளறுவோம்
சாம்பலை
கோழிகளாக !

www.tamilarangam.net

# அமரர் ஆ.துரைராஜசிங்கம்

தோழர் ஆ.துரைராசசிங்கம் 1989 ஆக. 3ம் திகதி காலமானர்.

யாழ்ப்பாணப் பிற்போக்கு சுருட்டு முதலாளிகளின் குறைந்த கூலிக்கு தம் உழைப்பை விற்றுக்கொண்டிருந்த தம் போன்ற ஏழைத் தொழிலாளர்களை அகில இலங்கை சுருட்டுத்தொழிலளர் சங்கம் என்ற அமைப்பிற்குள் கொண்டுவந்து அவர்களின் நியாயமான உரிமைப்போராட்டங்களுக்குத் தலைமைதாங்கினர்

இன்று சுருட்டுத்தொழிலாளர்கள் பெறும் கூலிகளும் உரிமைகளும் அப்போராட்டங்களின் பலன்களேயாகும். 1956 களில் ஏற்பட்ட இளைஞர்களின் எழுச்சிகளிலும் அவர் பங்குகொண்டார்.

அவர் இணைந்திருந்த இலங்கை சமசமாசக்கட்சிக்காக வடபகுதியில் பிற்போக்காளரின் பிரசாரங்களுக்கெதிராக தமது சேவைகளை மேற்கொண்டார்.பிரபல சுருட்டு முதலாளியை தேர்தலில் தோற்கடித்து, சமசமாசக்கட்சி அங்கத்தவராக யாழ்ப்பாண நகரசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

பிற்காலத்தில் சமசமாசக்கட்சித் தலைமைகளில் ஏற்பட்ட சீரழிவுகளும், தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்ட தேசிய உணர்ச்சிகளும் இவரின் அரசியல் வாழ்க்கையைப் பாதித்தன.

வடக்குப்பகுதித் தொழிற்சங்க வரலாற்றில் தோழர் ஆ.துரைராசசிங்கத்தின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்

அவருக்கு எமது அஞ்சலிகள்.

www.tamilarangam.net

## சமூக விரோத சக்திகளுக்கு எதிராக

# ஐக்கியப்பட்டுப் போராடுவோம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களான திரு **அ. அமிர்தலிங்கம்**, திரு. **வெ. யோகேஸ்வரன்** ஆகியோர் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டதை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அகிம்சைப் போராட்டங்களில் நம்பிக்கை கொண்டவர்களும், ஜனநாயக வழிமுறைகளில் செயல்பட்டு வந்தவர்களுமான கூட்டணித் தலைவர்கள் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டது அனைத்து தமிழ்பேசும் மக்களிற்கும் வேதனையையும், வெறுப்பையும் தருவதாகும்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் கடந்த முப்பது வருடங்களிற்கு மேலாக ஈடுபாடு கொண்டிருந்த தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் மற்றைய தலைவர்களும் தனிநாட்டுக் கோஷத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தியதோடு, தமிழினத்தின் இன்னல்களை உலகறியச் செய்தவர்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

மாற்று இயக்கப் போராளிகளையும், அரசு அதிகாரிகளையும், கல்விமான்களையும், பத்திரிகையாளர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் கண்மூடித்தனமாக படுகொலை செய்யும் புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் தமிழினத்தை அழிவுப்பாதைக்கே இட்டு செல்வதாய் அமையும். எனவே நாம் அனைவரும் கட்சி பேதமின்றி, கருத்து வேறுபாடுகளை மறந்து இச் சமூக விரோத சக்திகளை எதிர்த்து போராட முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

1. தமிழர் விடுதலைக் கூட்டணி
2. தமிழீழ விடுதலை இயக்கம்
3. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
4. ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி
5. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி
6. ஈழ மாணவர் பொது மன்றம்
7. ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி
8. ஈழத் தொழிற் சங்க சம்மேளனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தியவள்



## ஆசிரியர் கருத்து

இலங்கையின் தரகுமுதலாளித்துவத்தின் அரசாங்கம் தனது பதவியில் நீடிப்பதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கின்றது. நாட்டிலுள்ள சகல மக்களின் வறுமையைப் போக்கும் திட்டங்களை அமுல் நடத்தப் போவதாகவும், சகல எதிர்ப்புச் சக்திகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தப் போவதாகவும் மேடைகளில் முழங்கிப் பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், இன்று மக்களுக்கு இரண்டு ங்களுக்கு உணவு கொடுப்பதற்கே வக்கில்லாது வங்குரோத்து மைக்கு வந்துவிட்டது. ஏகாதிபத்திய நாடுகளின் அடிவருடிப் பிச்சை எடுத்து ஆட்சிசெய்த அரசாங்கம் அவர்களை மேலும் எப்படித் திருப்திப்படுத்தலாமென்ற பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை சந்தோசப்படுத்துவதன் மூலமாக அல்லது பிரித்தானிய உளவாளிகளுடன் பேரம்பேசுவதன் மூலமாக தனது பொறியப் போகும் ஆட்சியைக் கட்டிக்காக்க முயலுகின்றது இந்த அரசாங்கம்.

நாட்டில் வறுமை, வேலையில்லாமை போன்ற பொருளாதாரப் பிரச்சனைகள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. தரகுமுதலாளித்துவத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை நாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரத்தைச் சீரழித்ததுடன் தேசியமுரண்பாடுகளைப் கூர்மையடைய வைத்தன. திறந்தபொருளாதாரக் கொள்கை சிங்களமுதலாளிகளின் தேசியஉற்பத்திகளையும் அதனுல் வேலை பெற்ற தொழிலாளர்களையும் பாதித்தது மட்டுமல்லாமல், வர்த்தகம், உல்லாசப்பிரயாணிகள் ஆகிய துறைகளில் சிங்கள-தமிழ் தேசியமுதலாளிகளை நேரடியாக மோதவைத்தது. இந்த மோதல்களின் விளைவாகவே 1983 இனப்படுகொலைகளின் போது 60க்கும் மேற்பட்ட தமிழர்களின் தொழில் நிறுவனங்கள் அழிக்கப்பட்டன.

பலாத்காரமாக தென்னிலங்கையில் நிலைநிறுத்திக்கொள்ள முயன்ற சிங்களதேசிய முதலாளிகளின் ஆதரவைப்பெறும் நோக்கத்துடன் சிறிலங்கா அரசாங்கம் தனது இனவெறி அரசியலை தமிழ்மக்களுக்கெதிரான முழுமையான யுத்தமாகப் பிரகடனப்படுத்தியது. தொடர்ச்சியான இனவெறிப்பிரசாரங்களும், தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளையோ அல்லது சாதாரண சிங்களமக்களின் வறுமையையோ தீர்க்கவில்லை.

இனஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டங்களும், அதை ஒடுக்குவதற்காக அரசாங்கத்தினுல் நாட்டிற்குள் தருவிக்கப்பட்டவெளிநாட்டுசக்திகளின் ஊடுருவல்களும், இதனுல் கிலேசமடைந்த இந்தியாவின் தலையீடும், இவற்றின் மத்தியில் சீரழிந்தபொருளாதாரமும் சிறிலங்கா அரசாங்கத்தை இடைக்கால போர்நிறுத்தத்திற்குத் தள்ளியது.

தமிழ்மக்களின் தேசியஇனப்பிரச்சனைக்கு முழுமையான ஒரு தீர்வு காணுமலும், ஆயுதரீதியாக அதை ஒடுக்கவும் முடியாமலும் இருந்த நிலமைகளில், அன்னியப்படைகளின் உதவியுடனேயே ஒரு யுத்தநிறுத்தத்தையும் இடைக்காலத்தீர்வையும் ஏற்படுத்த சிறிலங்கா

www.tamilarangam.net

அரசாங்கத்தினால் முடிந்தது.

காலாகாலமாக இனவெறியும், தேசியவெறியும் ஊட்டப்பட்ட சிங்கள மக்கள் மத்தியில் இந்த வகையான தீர்வுகளுக்கு எதிர்ப்புக்கள் ஏற்பட்டது இயல்பானதேயாகும். சிங்களத் தேசியமுதலாளித்துவமும், குட்டிமுதலாளித்துவத் தீவிரவாதிகளும் மலையகத் தொழிலாளர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகப் பாவித்த இனவெறி கோசங்கள், "இந்தியப்படைகள் வெளியேற வேண்டும்" என மாற்றப்பட்டு அரசாங்கத்திற்கெதிராக மக்கள் அணிதிரட்டப்பட்டனர். வறுமையையும், விரக்தியையும் வாழ்க்கையாகக் கொண்ட இளைஞர்களை இந்த வகையில் அணிதிரட்டியுள்ள மக்கள் விடுதலை முன்னணி (JVP), தமிழ் மக்களுக்கான ஆகக் குறைந்த தீர்வான மாகாணசபைகளை எதிர்ப்பதன் மூலம் தனது குட்டிமுதலாளித்துவ இனவாத சொரூபத்தைக் காட்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியினருக்கு தாம் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல என்ற முறையில் சிறிலங்கா அரசாங்கமும் இனவெறியுடன் செயற்படுகின்றது.

* * *

தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டமானது முழுமையான வடிவத்தைப் பெறுவதற்கு காலதாமதமேற்பட்டதற்கான காரணம் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான சமூக பொருளாதாரக் காரணிகளேயாகும். நிலப்பிரபுத்துவ சமூகஉறவுகளையும்' அது உள்ளடக்கிய சாதிமுறைகளையும் பேணிப்பாதுகாத்து வந்த தமிழ் மக்களின் அரசியலானது நிலப்பிரபுத்துவத் தலைமைகளின் தேவைகளுக்கமையவே காலாகாலமாக நிர்ணயிக்கப்பட்டு வந்தது. உயர்சாதி நிலப்பிரபுத்துவத் தலைவர்களினால் ஆங்கிலேய

www.tamilarangam.net

அடிவருடும் அரசியல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. நடுத்தர வர்க்கத்தினர் தென்இலங்கை, மலேசியா போன்ற இடங்களில் உத்தியோகம் பெறுவதற்கும், உயர் மட்டத்தினர் மேல் நாடுகளில் கல்வி பெறுவதற்கும் வைத்தியம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெறுவதற்கும் வழி செய்த கல்வி முறைகளும், அவர்கள் செல்வத்தைக் குவிக்கவும் பெரும்தோட்டங்களிலும் வர்த்தகநிலயங்களிலும் முதலீடு செய்யவும் உதவிடும் அரசியல் கொள்கைகளும் கடைப் பிடிக்கப்பட்டன. இந்தக் கல்வி, பொருளாதார முன்னேற்றங்கள் சாதாரண விவசாயிகளும் ஒடுக்கப்பட்ட சாதியினரும் மறுக்கப்பட்டு வந்தது. இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பிரதேச, சாதி உறவு முறைகள் உயர்சாதி செல்வந்தர்களின் நலன்களைப் பேணிப்பாதுகாத்தன.

வெள்ளைக்காரரின் வெளியேற்றத்தின் பின்பும் தமிழ் ஆளும் வர்க்கத்தினர் ஆங்கிலேயர் துதிபாடும் தரகு முதலாளிகளுடனும் அவர்களின் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியுடனும் இணைந்து செயற்பட்டனர். இலவசமான சுயபாசைக்கல்வியினால் உருவாகிய [illegible] சிங்களக் கிராமிய நடுத்தர வர்க்க இளைஞர்களும் வளரமுயற்சித்துக் கொண்டிருந்த சிங்கள தேசிய முதலாளித்துவமும் சிங்கள மக்களின் தேசிய உணர்வுகளை வளர்த்ததன் மூலம் தரகு முதலாளித்துவத்தின் தளங்களில் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டனர். சிங்கள தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய அநகாரிக்க தர்மபால்ாவிலிருந்து பண்டாரநயக்கா வரை சிங்கள தேசியவாதத்தின் கோசமாக சிங்கள இனவெறியையும் தமிழ், இந்திய விரோத கோசங்களையே முன்வைத்தனர்.

சிங்கள தேசிய வாதத்தின் எழுச்சியினால் முதலில் (மொழி, தொழில்ரீதியாக) பாதிக்கப்பட்ட தமிழ் குட்டிமுதலாளித்துவ

www.tamilarangam.net

...சகத்தினரே தமிழ் தேசியப் போராட்டத்தை முதலில் ...ன்னெடுத்தனர். தனது அரசியல் இலாபங்களுக்காக இக்கோரிக்கைகளை முன்வைத்துப் போராட முன்வந்த தமிழ் முதலாளித்துவம் தனது வர்க்க நலன்களுக்காக சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் முற்போக்கு அம்சங்களையும் எதிர்த்தது.

தமிழ் மொழிக்குச் சமஉரிமை, சமட்டிஆட்சி போன்ற கோரிக்கைகளை முன்வைத்த அதே வேளையில், இலங்கையை ஆங்கிலேயரின் குடியேற்றநாடு என்ற நிலமையிலிருந்து மாற்றி ஒரு குடியரசாக்குவது, திருகோணமலை, கட்டுநாயக்க ஆகிய இடங்களிலிருந்து பிரித்தானியப்படைகளை அகற்றுவது, கல்வியில் தனியார் மற்றும் கிறித்தவ ஆதிக்கத்தை அகற்றுவது போன்ற மாற்றங்களை ஆங்கிலேய அடிவருடிகளுடன் சேர்ந்து தமிழ்த்தலைவர்கள் எதிர்த்தார்கள். தமிழ் முதலாளித்துவத் தலைமைகள் தாகு முதலாளித்துவ, கிறித்தவ, மத்தியதர வர்க்க கோரிக்கைகளையெல்லாம் தமது பாராளுமன்ற அரசியல் .தவைகளுக்கேற்ப முன்வைத்தார்கள். ஆனல் தமிழ் முதலாளித்துவத்தின் பொருளாதார முதலீடுகள் எல்லாம் தென்இலங்கையிலேயே தங்கியிருந்ததனல் முதலாளித்துவ அரசாங்கங்களின் கூட்டுறவும் அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இதன் காரணமாக அவர்களின் உரிமைப் போராட்டங்கள் எல்லாம் வரக்கக்கூட்டுறவைக் குலைக்காத வகையிலேயே முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் தொடர்ச்சியான பொருளாதாரச் சீரழிவுகளின் விளைவாக சிங்கள முதலாளித்துவத்திஞல் தமிழ் முதலாளித்துவத்துடன் இலாபங்களைப் பங்கு போட்டுக் கொள்ளவோ அல்லது தமிழ் மக்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தில் உரிய பங்கினைக் கொடுக்க முடியாத நிலமைகளுக்குத் தள்ளியது. இந்த நிலமைகளும் கல்வி,

www.tamilarangam.net

வேலை வாய்ப்பு ஆகியவற்றையிழந்த விரக்தியுற்ற தமிழ் மத்திய தர வர்க்க இளைஞர்களின் எழுச்சிகளும் தமிழ் முதலாளித்துவத்தை தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கும் நிலமைகளுக்குத் தள்ளியது.

சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறைகளுக்கெதிரான இளைஞர்களின் எதிரப்புப் போராட்டங்கள் அரசிற்கெதிரான ஆயுதப் போராட்டமாக பரிணம வளர்ச்சி பெற்றது.தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டகால அரசியல் வளர்ச்சியானது பாராளுமன்ற கால அரசியல் வளர்ச்சியிலிருந்து மாறுபட்டதாகவே அமைந்தது.

பாராளுமன்ற அரசியலில் பணம் படைத்தவர்கள்,பட்டம் பெற்றவர்கள்,உயர் சாதியினர்,கிறித்தவ மடாலயங்களில் செல்வாக்குடையவர்கள் மட்டும்தான் தமிழ் உயர்சாதிக் குட்டி முதலாளித்துவ பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்று அரசியலில் தலமை தாங்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.திட்டமிட்டு கல்வி வாய்ப்பு, உயர் உத்தியோகங்கள் ஆகியவற்றிலிருந்து ஒதுக்கப்பட்ட வன்னி, மன்னார், மட்டக்களப்பு மக்களும் ஒடுக்கப்பட்ட சாதியினரும் அரசியல் தலைமைத்துவத்திலிருந்து அன்னியமாக்கப்பட்டு இருந்தனர். ஒடுக்கப்பட்ட சாதியினரை சிறுபான்மையினராக்கும் பாராளுமன்ற தொகுதிமுறைகளும் தேர்தல் காலங்களில் பாவிக்கப்பட்ட பிரதேச, சாதி வாதங்களும் நிலப்பிரபுத்துவ உயர்சாதித் தலமைகளைப் பாதுகாத்தன. இவர்களும் தமது வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாத்தனர்.

இனவாத அரசின் ஒடுக்குமுறைகளும் அரசபயங்கரவாதமும் தமிழ் மக்களின் சகல பகுதியினருக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்டதால் அதற்கெதிரான ஆயுதப்போராட்டமானது சகல பகுதி மக்களையும் உள்வாங்கியதால் போராட்ட அணிகளில் சகல பிரதேசங்களையும், சாதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்திய

www.tamilarangam.net

...ாளிகள் இருந்தனர். சிறிலங்கா ராணுவத்திற்கெதிரான ஆயுதத்தாக்குதல்களையும், கண்ணிவெடிப் பாதுகாப்பையும் மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்தப் போராட்டங்களில் மக்களின் நேரடிப்பங்களிப்புகளோ அல்லது சுதந்திரமான மக்கள் அமைப்புக்களின் தலையீடுகளோ குறைவாகவே இருந்ததினால் தமிழ் மக்களின் சமூக சாதி உறவு முறைகளில் எந்தவிதமான தாக்கங்களையும் ஏற்படுத்தவில்லை. இளைஞர்கள் தத்தமது பகுதியிலுள்ள தொடர்புகள் உறவுகள் அடிப்படையில் இயக்கங்களில் இணைந்து கொண்டனர்.

முதலாளித்துவச் செயற்திட்டங்களையும் குட்டிமுதலாளித்துவத் தளங்களையும் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தோன்றிய இயக்கங்கள், அவர்களின் பாராளுமன்ற தந்திரோபாயத்திற்குப் பதிலாக ஆயுதப் போராட்டத் தந்திரோபாயத்தைப் பாவித்த போதிலும், ஒரே "குறிகோள்களுக்காகவே" செயற்பட்டனர். தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை கழகம் ஆகியவை இந்தப் பட்டியலில் அடங்கும். ஆரம்பத்தில் கூட்டணியின் ஆயுத அங்கம் போலவே இவை செயற்பட்டன. அவர்களால் "துரோகிகள்" என அழைக்கப்பட்டவர்களும் இடதுசாரிகளும் இவர்களின் ஆயுதத்தாக்குதல்களுக்கு ஆளானார்கள். துரையப்பா கொலையிலிருந்து தியாகராசா கொலை வரை இவர்கள் கூட்டணியினரின் (அரசியல்)தேவைகளையே பூர்த்தி செய்தனர். இந்த இயக்கங்கள், அன்றைய முதலாளித்துவத் தலைமைகளை ஏற்றுக்கொண்டன.

மார்க்சிய சித்தாந்தங்களை ஏற்றுக் கொண்ட இயக்கங்களாக ஆரம்பித்த ஈழப்புரட்சிகர அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவை மேற் கூறப்பட்ட இயக்கங்களிலிருந்து

www.tamilarangam.net

வேறுபட்ட பாதைகளிலேயே சென்றனர். ஈழப்புரட்சிகர அமைப்பு பத்திரிகை, மற்றும் சித்தாந்த வெளியீடுகளிலும் கவனம் செலுத்தினார்கள்.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணி தனது மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொது மன்றம், மற்றும் வெகுசன அமைப்புக்கள் ஊடாக மக்கள் மத்தியில் வேலை செய்ததுடன் இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுடனும் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். விவசாயக்கூலிகள், கடற்தொழிலாளர்கள் மத்தியில் செய்த வேலைகளின் பலனாக காலாகாலமாக ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் நம்பிக்கையையும் பெற்றனர்.

உயர்சாதி மத்தியதர வர்க்கத்தினரை பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ் சமூகத்தில், பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகள் சந்தித்த அதே இடர்களை இவர்களும் சந்திக்க வேண்டியேற்பட்டது. கடந்தகால இடதுசாரிக் கட்சிகள் வறிய தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தமது வேலைகளை ஆரம்பித்ததனால் அவர்கள் மத்தியிலேயே அதிகமான தளங்களைக் கொண்டிருந்தனர். இவர்களுடைய அரசியலை வர்க்க நலன்களுக்காக எதிர்த்த உயர்சாதி ஆளும் வர்க்கங்கள், மக்கள் மத்தியில் ஊறியிருந்த சாதி உணர்வுகளைப் பாவித்தனர். "சமசமாசம்" என்றால் தாழ்ந்த சாதியினருடன் சமஆசனம் சமபோசனம், கமுயுனிச கட்சி என்றால் கள்இறக்குபவர்கள் கட்சி என்றெல்லாம் பிரசாரம் செய்தனர்.

இவ்வாறான பிரசாரங்களை, தமிழ் உயர்சாதி மத்தியதர வர்க்கத்தினர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் எதிராக முன்வைப்பதானது அவர்களின் வர்க்க குணாம்சங்களையே எடுத்துக் காட்டுகின்றது.

* * * *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப் பின்னணிகளிலேயே இன்றைய அரசியல் நிலமைகளை நாம் அவதானிக்க வேண்டியுள்ளது.

1983களுக்குப்பின் உச்ச நிலையை அடைந்த அரச ஒடுக்குமுறைகளின் போது ஆயுதம் தாங்காத காரணத்தினால் பாரம்பரியப் பாராளுமன்றத் தலைமைகள் பலவீனமடைந்த பொழுது, தமிழ் மக்களின் தலைமைத்துவத்திற்கான போட்டிகளும் ஆரம்பமாகின. கண்ணி வெடிப் போராட்ட முறைகள் சிறிலங்கா ராணுவத்தினரின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி வடபகுதியில் அரச நிர்வாகத்தையும் சீர்குலைத்த பொழுது குட்டி முதலாளித்துவ இயக்கத் தலைமைகளின் ஆயுதத் தர்பார்களும் உச்சக் கட்டத்தையடைந்தன. அரசியல் ஊமைகளாக்கப்பட்ட மக்களின் தலைவர்களென ஆயுதம் தாங்கியவர்கள் தம்மைத்தாமே நியமித்துக் கொண்டனர்.

பாரம்பரிய பாராளுமன்றத் தலமைகளின் பலவீனத்தைக் கண்ட உயர்மட்ட ஆளும் வர்க்கங்கள் தமது அரசியல் அபிலாசைகளைக் கட்டிக் காக்கக்கூடிய இயக்கங்களுக்குப் பணமும் ஆதரவும் கொடுத்து வளர்க்க ஆரம்பித்தனர். வெளி நாடுகளில் சுகபோகங்களில் வாழ்ந்து கொண்டிருந்த உயர்வர்க்கத் தமிழர்களும் அவர்கள் மத்தியில் ஊடுருவிய ஏகாதிபத்திய சக்திகளும் தமது வர்க்க நலன்களைக் காக்கக்கூடிய இதே இயக்கங்களை ஆதரிக்க ஆரம்பித்தனர். இடதுசாரி கொள்கைகளுடைய இயக்கங்கள் இந்த வர்க்கத்தினர்களினால் உதாசீனம் செய்யப்பட்டன.

தமிழ் நிலப்பிரபுத்துவ மற்றும் குட்டிமுதலாளித்துவத் தன்மைகளையெல்லாம் கட்டிக்காத்த விடுதலைப்புலிகள் இயக்கம் உயர் வர்க்கங்களினதும் மத்தியதர வர்க்கத்தினரதும் ஆதரவைப் பெற்றதில் ஆச்சரியமில்லை.

தலமைக்கான போட்டியில் இதே வர்க்கங்களின் உதிரிகளின்

www.tamilarangam.net

ஆதரவுடனும் சமமான ஆயுத பலத்துடனும் வளர்ச்சியடைந்து வந்த தமிழீழ விடுதலை இயக்கத்தினை அழித்தொழிக்க வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. அதன் தலைவர் சிறிசபாரத்தினமும் முன்நூறுக்கும் மேற்பட்ட போராளிகளும் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் உயர் வர்க்கங்கள் இதை மௌனமாக ஏற்றுக்கொண்டன.

இதே பாரம்பரியத்தைக் கொண்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அது உள்வாங்கிய மாவோவாத சித்தாந்தத்திலும் அதன் விளைவாக ஏற்பட்ட உட்கொலைகளினாலும் தன்னைத் தானே அழித்துக் கொண்டது.

குட்டிமுதலாளித்துவ "நார்தோனிக்"(குண்டு வெடிப்புப் பயங்கரவாத) தன்மைகளைக் கொண்ட ஈழப்புரட்சிகர அமைப்பு அது தளம் கொண்டிருந்த மத்தியதர வர்க்கத்திற்குரிய ஊசலாடும் தன்மையைக் கொண்டிருந்தது. உயர்மட்டத்தினர் ஆதரவு கொடுத்த விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு கொடுத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர். பங்களூரில் சனாதிபதி சயவர்த்தனாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தமிழர்களின் "தலைமை" தமிழர் விடுதலைக் கூட்டணியரிடமிருந்து விடுதலைப்புலிகளுக்கு மாறிவிட்டது என அறிவித்து, தமிழ் மக்களின் தலைமைக்கான போட்டியில் தாம் விடுதலைப்புலிகளை ஆதரிக்கப் போவதைப் பகிரங்கமாக அறிவித்தனர்.

1987 ஆடி மாத இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்பு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளில் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்கள் தமிழ்ப்பிரதேசங்களுக்குத் திரும்பினார்கள். மற்றைய அரசியல் அமைப்புகளுடன் சனநாயக ரீதியாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பாத விடுதலைப்புலிகள், தமது அரசியல்

www.tamilarangam.net

தந்திரோபாயமற்ற நடவடிக்கைகளினுல் இந்தியப்படைகளுடன மோதினர். ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தையும் தாம் ஏற்படுத்திக்கொண்ட தளங்களையும் புத்திசாலித்தனமாகப் பாவித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழவிடுதலை இயக்கம், ஈழதேசிய சனநாயக விடுதலை முன்னணி ஆகியவை மக்கள் ஆதரவைக் கணிப்பிடும் தேரதல்களில் பங்குகொண்டன. இதைத்தொடர்ந்து ஈழப்புரட்சிகர அமைப்பும் விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றி வெற்றியும் பெற்றனர்.

பாராளுமன்றத் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலமைகள் ஒதுக்கித் தள்ளப்பட்டதுடன், வட-கிழக்கு மாகாணசபையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று அரசாங்கம் அமைத்தனர். தேசிய எதிர்க்கட்சிகளான கமுயுனிசுக்கட்சி, மக்கள் கட்சியாகியவற்றின் அங்கத்தவர்கள் வட-கிளக்கு மாகாண சபையில் (மட்டுமே) மந்திரிகளாக இருந்தனர். கடந்த 40 வருடகால அரசியலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு நகரசபையில் கூட இடதுசாரிகள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது கிடையாது. விடுதலைப் போராட்டத்தின் போது ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இந்த இயக்கங்களுடாக ஏற்பட்ட அரசியல் வளர்ச்சியையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டின.

இந்த அரசியல் மாற்றங்கள், தமிழ் உயர்வர்க்கங்களினுலும், ஏகாதிபத்திய சக்திகளினுலும் சீரணிக்க முடியாதவையாகவே இருந்தன. மாகாணசபைத் தேர்தலுகளுக்கும், அதிலுள்ள கட்சிகளுக்குமெதிராக விசமப்பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாகாணசபை அங்கத்தவர்களுக்கு மரணதண்டனைகள் விதிக்கப்பட்டன. ஒருவர்

www.tamilarangam.net

கடத்திக் கொல்லப்பட்டார், நிர்வாகத்தடை, இன்னும் – எததனையோ......

தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்பட்ட முற்போக்கு மாற்றங்களைத் தடுத்து நிறுத்துவதும், அதற்குத் தலைமை தாங்குபவர்களை அழித்தொழிப்பதும் தமிழ் ஆளும் வர்க்கங்களின் இன்றைய தேவையாக இருக்கின்றது. இந்தப்பகுதிகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை தடுத்து நிறுத்துவதில் சிங்கள முதலாளித்துவத்திற்கும் அக்கறையுண்டு. இந்த முதலாளிததுவ தேவைகளை நிறைவேற்றக்கூடிய இயக்கமாக ஏகாதிபத்திய ஆதரவுள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் இருக்கினறது. தமிழ் முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக சிங்கள முதலாளித்துவத்துடன் பேரம் பேசுவதற்கு முதற்படியாக (பிரேமதாசா– விடுதலைப்புலிகள் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தவுடனேயே) கூட்டணித்தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். <u>தமிழ் முதலாளித்துவத்தின் தலைமைப் போட்டியின் வெளிப்பாடே திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேசுவரன் ஆகியோருடைய கொலைகளாகும்</u>.

சாதாரண தமிழ் மக்களுக்கெதிராகவும் முற்போக்கு அரசியல் மாற்றங்களுக்கெதிராகவும் ஏற்பட்டிருக்கும் சிங்கள–தமிழ் முதலாளித்துவத் தலைமைகளின் கூட்டுக்கெதிராக சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டியது இன்றைய தேவையாக அமைகின்றது.

"சிந்தனை" யில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களேயாகும்.
ஆசிரியர் குழு.

www.tamilarangam.net

# பேச்சுவார்த்தை...

தேதியைக் காட்ட நாட்காட்டியும்
நேரத்தைக் காட்ட கடிகாரமும்
ஒன்றன் முன் ஒன்ருக விரைவாக
நகர்ந்த வண்ணம் உள்ளன
நம்மவர்கள் அங்கங்கே பேசிக்கொண்டார்கள்
எதைப்பற்றி ?
நம் நாட்டை சூழ்ந்துள்ள கொலைக்கலாச்சாரம் பற்றியோ?
பத்திரிகைகளும் பேசமறுக்கின்றன அதைப்பற்றித்தான்
ஆனாலும் ஒரு சில....

ஈழத்தில் யுத்த நிறுத்தம்
கந்தளாயில் பாதுகாப்புடன்
அதைப்பற்றித்தான் பேசுகின்றன பத்திரிகைகள்
ஆனாலும் கொலை பற்றி எந்தவொரு உண்மைகளும்
வெளிவரவில்லை
நாம் கேட்டோம்
எங்களை ஏன் அடகுவைத்தீர்கள் என
சில வேளை
பதில்கிடைக்கலாம் இல்லையேல் துண்டுப்பிரசுரம் கிடைக்கலாம்
நம்பித்தான் இருக்கின்ரேம் நாமெல்லாம்
துப்பாக்கியால் எதுவும் கிடையாது என
கடைசியில் ஏகாதிபத்தியத்தின் புத்திரர்கள் நம்மை
அடகுவைத்து பேச்சுவார்த்தை நடத்திஞர்கள்

பறப்பதற்கு விமானங்கள்
சர்வதேசத்தில் B.B.C
அச்சடிக்க அச்சுக்கூடங்களும்
ஆனல் மக்கள் மத்தியில் ஆயுதபயம்தான்
எங்கே எங்கே என்று அலைகின்ருர்கள்
கடைசியில் பொது எதிரி போராளிகளும் பொதுமக்களுமே
பேச்சுவாரத்தை முடிவில்.....

சுந்தி

www.tamilarangam.net



# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

ரி.விசயரத்தினம்.

உலகத்திலுள்ள எல்லா இன மக்களுக்கும் அம்மக்களின் உரிமைகளை நிலைநாட்ட காலத்திற்கு காலம் தோன்றி மறைந்த எத்தனையோ தலைவர்களை நாம் கண்டிருக்கிறோம். மகாத்மாகாந்தி இந்திய சுதந்திரத்திற்காக அகிம்சை வழியால் மிகப்பெரிய வல்லரசான பிரித்தானியருடன் தனது போராட்டத்தை தொடர்ந்து நடாத்தி, கடைசியில் வெற்றியும் கண்டார். இதே போன்றுதான் எம்மின மக்களின் விடுதலைக்கு முன்நின்று வழிகாட்டிய தந்தை செல்வா அவர்களும் எமது உரிமைகளை வென்றெடுக்க அகிம்சை வழியில் போராடி தனது வயது முதிர்ச்சியினால் வெற்றி காண முன்னமே மறைந்து விட்டார். ஆனால் அவர் மறைய முன்னர் தனது பணியை தொடர்ந்து நடாத்தும் பொறுப்பை திரு.அ.அமிர்தலிங்கத்திடம் ஒப்படைத்து, அதை கொழும்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டம் ஒன்றில் பகிரங்கமாக மக்களிற்கு வெளிப்படுத்தினார். அவர் அக்

www.tamilarangam.net

கூட்டத்தில் கூறியதாவது, 'எனது தலைமைக் காலத்தில் எம்மின மக்கள் சுதந்திரமாக வாழும் நிலை கட்டாயம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை, ஆனல் திரு.அமிர்தலிங்கம் அவர்களின் காலத்தில் நிச்சயமாக எம்மின மக்களிற்கு சுதந்திரமாக வாழும் நிலை கட்டாயம் ஏற்படும்' என்று தெரிவித்தார். இந்த பாரிய பொறுப்பை என் தந்தை செல்வா எம் தலைவர் திரு. அமிர்தலிங்கம் மீது சுமத்திஞர்?. இந்த பாரிய பொறுப்பை தாங்கி நிற்க கூடிய தகுதியை அவர் பெற்றிருந்தமையால்தான், அவர் ~~தான்~~ செல்வா தந்தையின் நம்பிக்கைக்கு பாத்திரமாக,

தமிழீழத்தின் அமிர்தத் தந்தையாகவும்,
தமிழ் மக்களின் பாசம் என்னும் கயிற்ருல்
பாதுகாக்கும் தளபதியாகவும்,
தம்பி மாருக்கு வீர உணர்வை ஊட்டிய தமையன் ஆகவும்,
எம்மை போன்றவர்களுக்கு அரசியல் ஊட்டிய ஆசாஞகவும்
விளங்கிஞர்.

இவர் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்போம்! எப்படி மகாத்மா காந்தி தனது வாழ் நாள் முழுக்க இந்திய சுதந்திரத்திற்காய் தன்னை அர்பணித்து போராடி சுதந்திரம் கிடைக்கும் நேரம் அச்சுதந்திரத்தில் பங்கு கொள்ளாமல் அந்த சுதந்திரத்திற்கே தன்னை அர்ப்பணித்து சென்ருரோ, அதே போன்றுதான் எமது தலைவர் திரு. அமிர்தலிங்கமும் தனது வாழ்நாள் முழுவதும் எம்மினத்திற்கு விடிவு கிடைக்க தன்னை முழுமையாக அர்ப்பணித்து போராடிஞர். எமது இன மக்களிற்கு விடிவு கிட்டவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அந்த விடிவிற்காய் தன்னை அர்ப்பணித்து விட்டார்.

எப்படி மகாத்மாவின் வழிகாட்டல் முன்னெடுக்கப்படுகின்றதோ அதேபோன்று திரு.அமிர்தலிங்கத்தின் வழிகாட்டலும் முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னெடுத்துச் செல்லப்படும். காரணம் தியாகத்திலும் நேர்மையாக எடுத்துச் செல்லப்படும் வழிகாட்டல்கள் ஒரு போதும் பின்னேக்கிப் போவதில்லை. திரு.அமிர்தலிங்கம் அவர்கள் எம்மினத்திற்கு செய்த சேவைகளை, தியாகங்களை எம் இளைஞர்கள் நினைவில் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் வருங்காலத்தில் எம்மினத்தை வழிகாட்டக்கூடிய தகுதியை பெற்றவர்களாக திகழமுடியும்.

சட்டக்கல்லூரியில் படிக்கும்போதே இ தமிழரசுக்கட்சியின் இளைஞர் இயக்கத்தில் அங்கத்தவராகி . . தந்தை செல்வாவுக்கும், அமரர் வன்னியசிங்கம் அவர்களிற்கும் கட்டுப்பட்ட ஒரு வீர இளைஞர் ஆக விளங்கிய காரணத்தால் 1952ல் நடைபெற்ற இலங்கையின் பாராளுமன்ற இரண்டாவது பொதுத்தேர்தலில் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டார். அன்று தொட்டு எம்மினத்திற்கு எதிராய் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கண்டித்ததுடன் அதற்கு எதிராக அகிம்சை வழியில் தந்தை செல்வாவுக்கு கட்டுப்பட்டு எதிர்ப்பை காட்டிவந்தார்.

1956ல் பண்டாரநாயக்க அரசு சிங்கள மொழி மட்டும் ஆட்சி மொழி என பிரகடனப்படுத்தியது. அதனை எதிர்த்து பாராளுமன்றத்திற்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தை தந்தை செல்வாவுடனும், மற்றும் சில தலைவர்களுடனும் முன்னின்று நடாத்திய காரணத்தால், பண்டாரநாயக்காவின் அரசினால் ஏவப்பட்ட காடையர்கள் சத்தியாக்கிரகத்திற்கு இன்னல்களை விளைவித்ததுடன் திரு.அமிர்தலிங்கம் அவர்களின் சிரசினையும் தாக்கினார்கள். வழிந்த குருதியுடன் பாராளுமன்றம் சென்ற அமிர்தலிங்கத்தை பார்த்து பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 'வீரதளம்புகளுடன் வருகிறார்' என்று ஏளனமாக கூற, அப்போது திரு. அமிர்தலிங்கம் பண்டாரநாயக்கவினை நோக்கி 'பிரதமர் அவர்களே! எனது சிரசில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து சிந்தும் இரத்தம் என்னுடையது மட்டும்' என்று எண்ணி விடாதீர்கள். இது 35 லட்சம் தமிழர்களின் இரத்தத்திற்கு சமன். எனது சிரசு சிந்தும் ஒரு துளி குருதிக்கும் கூட இந்த அரசு ஒரு நாள் பதில் சொல்லியே தீர வேண்டும்' என்று கர்ச்சித்தார். எமது இனத்திற்காக முதன்முதலாக இரத்தம் சிந்திய முதல் தமிழ் தலைவர் திரு.அமிர்தலிங்கம் மட்டும்தான். அது மட்டுமன்றி இரத்தம் சிந்தசிந்த ஒரு பாராளுமன்றத்தில் பங்கு பற்றி தன் மக்களின் நிலையை எடுத்துரைத்த முதல் தலைவரும் அவரே.

இதைத் தொடர்ந்து பண்டார நாயக்க அவர்கள் வேறு வழியின்றி தந்தை செல்வாவுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்தார். அதுதான் பண்டா—செல்வா ஒப்பந்தமாகும். இது 1957 ஜூலையில் வெளியிடப்பட்டது. அதன்படி வடக்கு கிழக்கு பிரதேசம் ஒன்று சேர்ந்த சுயாட்சியும், அத்துடன் வடக்கு கிழக்கில் தமிழ் அரசமொழியாகவும் ஏற்கப்பட்டது. அத்தோடு வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றம் கட்டுப்படுத்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சியானதும் புத்தபிக்குகளின் எதிர்ப்பின் காரணத்தாலும் பிரதமர் பண்டாரநாயக்கா இந்த உடன்படிக்கையை கிழித்தெறிந்து சமரசஉடன்படிக்கையை மீறினார்.

இதை தொடர்ந்து 1957ல் 'சிறி' எதிர்ப்பு போராட்டத்தை தந்தை செல்வாவுடன் முன்நின்று திரு.அமிர்தலிங்கம் நடாத்தினார். 1958ல் அரசாங்கத்திற்கு எதிராக நடந்தார் என்கிற குற்றச்சாட்டின்பேரில் வீட்டுத்தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 1961 இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கச்சேரிகள் முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னின்று நடாத்தினார். அதன்போது பொலிசாரினால் தாக்கப்பட்டார். ஆனாலும் வடக்கு கிழக்கு மாகாண கச்சேரிகள் அனைத்தும் செயல் இழக்குமளவிற்கு மிகவும் வெற்றிகரமாக நடாத்தினார்

www.tamilarangam.net

அரசினால் ஒன்றும் செய்யமுடியாமல் போகவே அவசரகாலநிலை பிறப்பி த்து, முன்னின்ற தலைவர்களை கைது செய்து பனாகொடை முகாமில் தடு த்து வைத்தார்கள். இதிலும் திரு.அமிர்தலிங்கமும் அவரது மனைவி மங் கையற்கரசியும் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டார்.

1966ம் ஆண்டில் திருகோணமலையில் சிங்களவர் கள். சட்டவிரோதமாக குடியேறியபோது அதை தடுப்பதற்கு இளைஞர் கள் திருகோணமலை நீதவான், பொலிஸ் அதிபர் ஆகியோரின் அரசாங்க விடுதிக்கு முன்னுள் உள்ள பகுதியில் சட்டவிரோதமாக சிறு குடிசைகளை கட்டினார்கள். அதில் நான் உட்பட பலர் பொலிசாரினால் தாக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டோம். இதை அறிந்த திரு. அமிர்தலிங்கம் அவர்கள் உடனே திருகோணமலைக்கு வந்து அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து இவ்விளைஞர்களுக்கு இந்தப்பகுதியை கொடு க்கவேண்டும், இல்லாவிட்டால் சட்டவிரோதமாக சட்டவிரோதமாக குடியேறிய அனைவரையும் எழுப்பவேண்டும் என்று வாதிட்ட காரணத்தால் ஒன்றும் செய்யமுடியாமல் அப்பகுதிகளை தமிழ் இளைஞர்களிடமே கொ டுப்பதாக தீர்மானித்தார்கள்.

1972ல் தந்தை செல்வாவுடன் தமிழ்நாட்டிற்கு சென்று அங்குள்ள எல்லாத்தலைவர்களையும் சந்தித்து எம்மினமக்களிற்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துரைத்தார். அந்த ஆண்டே தமிழர் ஐக்கிய முன்னணியை அமைத்து அதன் இணைப்பொது செயலாளராகப் பொறுப்பேற்று, புது அரசியல் திட்டத்தில் தமிழ்மக்களின் உரிமைகளை அடக்கிய 6 அம்சத்திட்டத்தை சமர்ப்பித்தார். அதை அரசு மறுக்கவே புதிய அரசியல் சட்டப்பிரதியை எரித்து அது எங்களை கட்டுப்படுத்தாது என்று பகிரங்கமாக தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து 1976ல் தலைவர் அமிர்த லிங்கத்தின் சொந்த இடமான பண்ணாகத்தில் கூடிய தமிழர் ஐக்கிய முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணி தங்கள் கட்சியின் பெயரை தமிழர் விடுதலைக்கூட்டணி என்று மாற்றியதுடன் தந்தை செல்வா, தலைவர் திரு.பொன்னம்பலம், தலைவர் திரு.தொண்டமான் ஆகியோர் தலைமை பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதுடன், கட்சியின் முழு நடவடிக்கையையும் கொண்டு நடாத்தும் முகமாக பொதுச்செயலாளர் நாயகமாக திரு.அமிர்தலிங்கம் பொறுப்பேற்றார். அந்த மாநாட்டில்தான் தமிழ்மக்களுக்கு வேறு என்ன வழி என்று சிந்தித்து போத்துகேயரிடம் இருந்து சிங்களவரின் கைக்கு மாறிய தமிழர்களின் இறைமைகளை பெற்று தமிழீழம் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை எடுக்கும்போது இலங்கை அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் அவை மீறப்பட்டமை, சிங்களவர்களினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் எல்லாம் தெரியப்படுத்தி, அரசாங்கங்கள் புதிய அரசியல் திட்டத்தில் தமிழ்மக்கள் சமர்ப்பித்த குறைந்த பட்சக் கோரிக்கை கூட ஏற்கப்படாத பட்சத்தில் வேறு வழியின்றி 'தமிழீழம்' என்ற கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிவித்தார்கள்.

அதைத்தொடர்ந்து அகிம்சை வழியில் சட்டமறுப்புச்செய்வது என்று தீர்மானித்து, நீதிமன்றங்களிலும், பொதுஇடங்களிலும் அரசின் புதிய அரசியல் திட்டம் எம்மை கட்டுப்படுத்தாது என்றும் 'தமிழீழம்' அமைத்து எங்களுக்குரிய புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கப் போவதாகவும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்கள். இதை முன்னின்று நடத்திய காரணத்தால், திரு.அமிர்தலிங்கமும் இன்னும் முக்கிய தலைவர்களும் கைது செய்யப்பட்டு இராஜதுரோகம் குற்றம் சுமத்தப்பட்டு திரு.அமிர்தலிங்கம் முதலாம் எதிரியாகவும் குறிப்பிட்டு அவசரகாலச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ரயல் அற் பார் (                ) என்கிற விசேட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். இதை எதிர்த்து தந்தை செல்வா, திரு பொன்னம்பலம், திரு.திருச்செல்வம் அவர்கள் உட்பட 60க்கும் மேற்ப

www.tamilarangam.net

ட்ட பிரபல வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள். இந்த வழக்கில் திரு.திருச்செல்வம் அவர்கள் தமிழினத்தின் 'இறைமைகள்' என்னும் நிலையை முழு உலகத்திற்கும் தெரியப்படுத்துமுகமாக இந்த வழக்கை பயன்படுத்தினார். இவர் தமிழ் மக்கள் முதலில் போத்துக்கேயரிடம் முதல் அரசுரிமையை இழந்தார்கள். அந்த அரசுரிமை ஒல்லாந்தர், ஆங்கிலேயரிடம் என்று மாறி இன்று சிங்களவர் கையில் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாருக கை மாறப்பட்டுள்ளது என்றும், 1972 ல் ஏற்பட்ட புதிய அரசியல் திட்டத்தில் எம்மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்றும் எனவே இவ்வரசியல் திட்டம் தமிழ் மக்களை கட்டுப்படுத்தாது என்றும் வாதிட்டார். திரு. பொன்னம்பலம் அவர்கள் அவசரகாலச்சட்டம் சட்டத்திற்கு மாருக அமைக்கப்பட்டது என்று வாதிட்டார். இதில் திரு.பொன்னம்பலத்தின் வாதத்தை ஏற்று நீதவான் மூவரும் அவசரகாலச்சட்டப் பிரகடனம் முறையில்லை என்று தீர்மானித்தார்கள். இதனால் அரசாங்கமானது திரு.அமிர்தலிங்கத்திற்கும் மற்றைய தலைவர்களிற்கும் எதிராக நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டது.

இதைத் தொடர்ந்து தந்தை செல்வா இறக்கவே, கட்சியின் தலைமைப்பொறுப்பை திரு.சிவசிதம்பரம் அவர்கள் ஏற்க, திரு.அமிர்தலிங்கம் அவர்கள் பொதுச்செயலாளர் நாயகமாக பொறுப்பேற்று 1977 ல் தமிழ் மக்களின் ஆணை கேட்டு நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி இலங்கையின் இரண்டாவது பெரிய கட்சியாக தற்செயலாக வரவேண்டிய சந்தர்ப்பத்தில் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை திரு. அமிர்தலிங்கம் பொறுப்பேற்ருர்கள். அப்பதவி கிடைத்து அவர் நடாத்திய முதலாவது சிம்மாசனப்பிரசங்க விவாதத்தின் போது 'நான் தற்செயலாக இந்த் எதிர்க்கட்சி பதவிக்கு வந்திருக்கிறேன். இன்றைக்கும் யூ.என்.பியில் இருந்து 12பேர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மாறினலும் எனது இநத எதிர்க்கட்சி தலைவர் பதவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய்விடும். எனக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி எம்மக்களுக்கு இந்த பதவி மூலம் செய்யக்கூடிய அனைத்துக் காரியங்களையும் செய்வேன். எனவே நான் மற்றைய எதிர்க்கட்சித் தலைவர்களை விட மாறுபட்டவனாகத்தான் இந்த சபையில் விளங்குவேன்' என்றும் தமிழ் மக்கள் தங்களிற்கு தந்த ஆணையையும் குறிப்பிட்டு பேசினார்.

அந்த ஆண்டே (1977ல் ஆகஸ்ட்) ஆவணி மாதத்தில் பெரிய இனக்கலவரம் மூண்டது. சிங்களப்பகுதியில் தமிழர்களை கொலை, கற்பழிப்பு, சூறையாடல் போன்ற பல இன்னல்களுக்கு ஆளானார்கள். பாராளுமன்றத்தில் என்னதான் கத்தினாலும் சிங்கள அரசு செவி சாய்க்க மறுத்தது. அதனால் திரு.அமிர்தலிங்கமும், பாரியாரும் தமிழ்நாட்டிற்கு சென்று அங்குள்ள தலைவர்களை சந்தித்து எங்கள் மக்களிற்கு இழைக்கப்படும் அநீதிகளை தெரியப்படுத்தினார்கள். இதன்பின்புதான் தமிழ்நாட்டின் மக்கள் எங்கள் விடயத்தில் அக்கறை காட்டத்தொடங்கினார்கள், என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதை அறிந்த இலங்கை அரசு திரு.அமிர்தலிங்கத்திற்கு எதிராக இராஜத்துரோக குற்றம் சுமத்தி பாராளுமன்ற பேச்சுக்களில் அமைச்சர் சிறில் மத்தியு உட்பட அரசாங்க கட்சி உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களை இன்றும் யாரும் மறக்கமுடியாது. ஒருவர் அவரை ராஜத்துரோகம் குற்றம் சுமத்தி நாட்டை விட்டு துரத்தவேண்டும் என்றும், மற்றவர் காலிமுகத்திடலில் இரண்டாக பிளக்கவேண்டும் என்றும் பல அரக்கத்தனமான பேச்சுக்களை பேசி அவருக்கு எதிராய் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்தது. இலங்கையில்தான் முதல் தடவையாக நடைபெற்றது.

1978ல் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கிய போதும் எம்மக்களின் அடிப்படை உரிமைகளைத் தன்னும் சேர்க்காமையினால் அந்த அரசியல் திட்டத்தையும் தமிழ் மக்கள் ஏற்கமுடியாது என வாதிட்டார். இதற்கிடையில் 1979ல் மீண்டும்

www.tamilarangam.net

இனக்கலவரம் திருகோணமலை போன்ற பகுதிகளில் இருந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டனர். எமது மக்கள் எமது நாட்டிலேயே அகதியாக்கப்பட்டனர். இவர்களை வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் திரு.அமிர்தலிங்கமும், மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி முக்கிய உறுப்பினர்களும் வேறு சில பொது ஸ்தாபனங்களும் பொறுப்பு ஏற்கவேண்டியதாயிற்று. இதைத் தொடர்ந்து தமிழ்மக்களின் எதிர்ப்பு கூடவே ஜெயவர்த்தனாவின் யூ.என்.பி அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபை மூலம் தற்காலிகமாக இந்தப் பிரச்சினையை தீர்க்கலாம் என்று அறிவித்ததன் மூலம் உலகத்தின் கண்ணிற்கு அரசாங்கம் பிரச்சினை தீர்க்க எத்தனிக்கிறது எனக் காட்டிக் கொண்டது.

இதைக் கருத்தில் கொண்டு த.வி.கூட்டணி பொதுச்சபையை கூட்டி மாவட்ட அபிவிருத்தி சபை சட்டமூலத்தை தற்காலிகமாக ஏற்பதா இல்லையா என்று வேண்டி ஆயிற்று. திருகோணமலை,வவுனியா,அம்பாறை, முல்லைத்தீவு, மன்னார்,மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வாழும் தமிழ்மக்களின் நிலையை கவனத்திற் கொண்டு கொஞ்ச அதிகாரமாவது எங்கள் கைக்கு வரட்டும், இதைத் தொடர்ந்து நாங்கள் எங்கள் உண்மையான இலக்கை நோக்கி முன்னேறமுடியும் என்று திரு.அமிர்தலிங்கம் மற்றைய முக்கிய தலைவர்களுக்கு கூறினார். அத்துடன் இதை நாம் தற்காலிகமாக ஏற்கிறோம் அன்றி எங்கள் தமிழ் மக்களின் கோரிக்கையை கைவிடவேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். இதை இளைஞர்களில் ஒரு பகுதியினரும் வேறுசிலரும் மறுத்தனர்.ஆனால் திரு.அமிர்தலிங்கத்தின் கருத்தையும்,மற்றைய த.வி. கூட்டணித்தலைவர்களின் கருத்தையும் ஏற்க பெரும்பான்மையானோர் சம்மதம் தெரிவித்தனர்.

( அடுத்த இதழில் தொடரும்........ )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகிலம்


Anibal Yañez/Perspectiva Mundial

## நிக்கரகுவாவில் நிரந்தரப் புரட்சி

I

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோவியத்புரட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், செஞ்சேனையை உருவாக்கியவருமான தோழர் லியோன் ட்ரொஸ்கி 1940 ஆகஸ்ட் 20ம் திகதி ஸ்டாலினின் ஏஜண்டினால் படுகொலைசெய்யப்பட்டார்.

அவரைக் கொலைசெய்ததினால் அவரின் தத்துவங்கள் அழிந்துவிடவில்லை. நிரந்தரப்புரட்சித்தத்துவம், ஸ்டலினிச அதிகாரிகளின் ஆட்சிநடக்கும் நாடுகளில் ஜனநாயகத்திற்கான அரசியல் புரட்சி ஆகியவை எல்லாம் இன்று வரலாற்று ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்தப்புரட்சிகர மாற்றங்களில் தோழர் லியோன் ட்ரொஸ்கி "வாழ்கின்றார்".

# ட்ரொஸ்கியின் கட்டுரைகள் பிரசுரம்

மாஸ்கோ, ஆக. 17,

ஜோசப் ஸ்டாலினினால் அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்பப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் லியோன் ட்ரொஸ்கியின் படைப்புகளை உத்தியோகபூர்வ சோவியத் சஞ்சிகையொன்று 66 வருடங்களின் பின் முதற்தடவையாக வியாழக்கிழமை பிரசுரித்திருக்கின்றது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தினசரியான பிராவ்டாவினால் 1923 இல் பிரசுரிக்கப்பட்ட "புதிய பாதை" (த நியூ கோர்ஸ்) என்ற கட்டுரைகள் மொலொடோய் கொமினிஸ்ட் (இளம் கம்யூனிஸ்ட்) சஞ்சிகை பிரசுரித்துள்ளது.

இக்கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளமையை சீர்திருத்தங்களுக்கு எதிராக செயற்படும் கட்சிக் கடும்போக்காளர்களுக்கெதிரான போராட்டத்தில் பயன்படுத்துவதற்கான கொர்பச்சேவின் முயற்சியாகவும் ட்ரொஸ்கியை புனருத்தாரணம் செய்வதை நோக்கிய தொடர் முயற்சிகளின் ஒரு அங்கமாகவும் அவதானிகள் கருதுகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிக்கரகுவாவில் நிரந்தரப் புரட்சி



சன்டினோ

ஏகாதிபத்திய சகாப்தத்தில் நிலவுடைமைப் பொருளாதாரத்திலிருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய அரவணைப்பில் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களிலிருந்து தோன்றிய தேசிய முதலாளித்துவ வர்க்கங்களினால் பூரணவளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளாதாரத்தையோ அல்லது ஜனநாயகத்தையோ உருவாக்க முடியாதென்பதையும், ஏகாதிபத்தியங்களுக்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டங்களையும் அரைநிலப்பிரபுத்துவ சர்வதிகாரங்களுக்கெதிரான ஜனநாயகத்திற்கான போராட்டங்களையும் முன்னெடுப்பதற்கு அவை வலுவற்றவையாகவே இருக்கின்றன என்பதை நிரந்தரப்புரட்சித்தத்துவம் விளக்குகின்றது.

மறுக்கப்பட்ட தமது உரிமைகளுக்காக போராட்டங்களை முன்னெடுக்கும் தேசத்துப் பாட்டாளிவர்க்கங்களே சர்வதிகாரங்களுக்கெதிராகவும் ஏகாதிபத்தியங்களுக்கெதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடிய தகமைவாய்ந்தவையாக இருக்கின்றன. முதலாளித்துவ ஜனநாயகக்கடமைகளான தேசவிடுதலைக்காகவும் ஜனநாயகத்திற்காகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்களை முன்னெடுக்கும் பாட்டாளிவர்க்கசக்திகள், முதலாளித்துவ ஜனநாயகத்தையோ அல்லது பொருளாதாரத்தையோ உருவாக்குவதுடன் நின்றுவிடுவதில்லை; அவை தொடர்ந்து பாட்டாளிவர்க்க சர்வதிகாரத்திற்கான நிரந்தரப்புரட்சியைத் தொடருகின்றன.

ருசியப்புரட்சியிலிருந்து .... நிக்கரகுவாப்புரட்சிவரை இந்த நிரந்தரப்புரட்சித்தத்துவம் மீண்டும் மீண்டும் நிருபிக்கப்பட்டு வருகின்றது.

• • • •

கடந்த பத்து ஆண்டுகளாக தனது புரட்சிகர வெற்றிகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் மோதிக் கொண்டிருக்கும் நிக்கரகுவாவின் வரலாறு ஒவ்வொரு புரட்சிவாதிக்கும் பலபாடங்களைக் கற்றுத்தருகின்றது.

## வரலாற்றுப்பின்னணி.

19ம் நூற்றாண்டிலிருந்தே நிக்கரகுவாவின் இயற்க்கை வளங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் சுரண்டி இலாபம் பெற்றுக் கொண்டிருந்தது. இந்தச் சுரண்டல்களினால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராம விவசாயமக்களிடம் அதிகமான அமெரிக்க எதிர்ப்புணர்வுகள் ஊறியிருந்தன. இதன் விளைவாக ஆங்காங்கே தோன்றிய எதிர்ப்புக் கிளர்ச்சிகளை அடக்குவதற்காக அமெரிக்க சிப்பாய்கள் நிக்கரகுவாவிற்குக் கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுவரப்பட்டார்கள். இந்த அமெரிக்கச்சிப்பாய்களுடன் அமெரிக்காவில் பயிற்றுவிக்கப்பட்ட தேசியகாவல் படையினரும் மக்களை ஒடுக்குவதற்குப் பாவிக்கப்பட்டனர். 1924இல் இந்த ஒடுக்குமுறைகளுக்கெதிரான விவசாயிகளின் போராட்டங்களை ஆகஸ்டோ சீசர் சன்டினோ தலைமைதாங்கி நடத்தினார். மக்களின் எதிர்ப்புப்போராட்டங்களிலிருந்து விலகிக்கொள்வதாக நடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது படைகளை மீளப்பெற்றுக்கொண்டு தங்களுடைய பிரதிநிதியான அனஸ்ராசியோ சமோசாவை தேசியகாவற்படைகளின் தலைவராக நியமித்தார்கள். அனஸ்ராசியோ சமோசாவின் நயவஞ்சகசதியினால் ஆகஸ்டோ சீசர் சன்டினோவும் அவரது தோழர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். 1936ல் அனஸ்ராசியோ சமோசா போலித்தேர்தல் மூலம் தன்னை சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியாக்கிக் கொண்டான். தனது சர்வதிகாரத்திற்கு ஜனநாயக மூலாம் பூசுவதற்காக நிலவுடமைவாதிகளின் பழமைவாதக்கட்சியை எதிர்க்கட்சியாக இயங்க அனுமதித்தான். ஆனால் சமோசாவின் குடும்பத்தின் ஆதிக்கம் அவனுடைய லிபரல் (மிதவாத) கட்சியினுள்ளும், அரசயந்திரத்தின் சகல பாகங்களிலும், தேசியகாவற்படையினுள்ளும் வியாபித்திருந்தது.

## பொருளாதாரப்பின்னணி

ஏகாதிபத்தியச் சந்தைகளில் தங்கியிருந்த விவசாய உற்பத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகளிலும் குடிசைத் தொழில்களிலும் தங்கியிருந்த பெருமளவு ஏழை விவசாயிகளையும் அவர்களைச்சுரண்டும் நிலவுடமையாளர்கள், மற்றும் முதலாளிகளின் நலன்களைப் பேணும் சமூக பொருளாதார அமைப்பையும் கொண்ட நாடாகவிருந்தது நிக்கரகுவா. கோப்பி, கால்நடை, சீனி ஆகியவை நாட்டின் பிரதான உற்புத்திகளாகவிருந்தன.

இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்பு முதலாளித்துவ வளர்ச்சிக்கு அவசியமான மின்சாரம், பெரும் தெருக்கள், துறைமுகங்கள், வங்கிகள் ஆகியவை நிக்கரகுவாவில் அமைக்கப்பட்டன. 1950 இல் உலகச்சந்தைக்கான பருத்தி உற்பத்தி பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டது. உணவு மற்றும் தானியங்களின் உற்பத்திகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகளின் நிலங்கள் பருத்தி உற்பத்திக்காக அபகரிக்கப்பட்டன. நிலமிழந்த விவசாயிகள் கிராமிய கூலிஉழைப்பாளிகளாக மாற்றப்பட்டனர், பலர் வேலை தேடி நகரங்களுக்குச் சென்றனர். ஏற்றுமதி விவசாய உற்பத்தியுடன் மற்றைய சேவைகளும், உணவு ஏற்றுமதி, அணி, கிருமிநாசினி, பசளை, ஆகிய ஏற்றுமதிக்கான உற்பத்திகளுடன் வெளிநாட்டு மூலதனத்துடன் சில இறுதிவேலைப்பாடுகளைச்செய்து மீள ஏற்றுமதி செய்யும் இயந்திரத்தொழில்களும் வளர்ந்தன. இந்த ஏற்றுமதி உற்பத்தி சிலருக்குச் செல்வத்தையும், பலருக்கு வறுமையையும் கொடுக்கும் சமனற்ற வளர்ச்சியையே ஏற்படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைநகரான மாளுவாவில் குறைந்த கூலியில் தொழிலாளர்களைச் சுரண்டும் சுதந்திர வர்த்தக வலையம் உருவாக்கப்பட்டது. 85%மான சிறு தொழில்கள் தலைநகரிலேயே ஸ்தாபிக்கப்பட்டன. இதன் காரணமாக தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் பலவீனமாக இருந்தாலும் ஸ்தாபனப்படுத்தப்பட்டிருந்தனர். 1972ல் ஏற்பட்ட பூமிஅதிர்ச்சிக்குப்பின் கட்டடத்தொழிலாளர்களின் தொகையும் அதிகரித்தது. 1978ல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 700,000 மக்களில் 100,000 பேர் தொழில்துறைகளில் வேலைசெய்த தொழிலாளர்களாக இருந்தனர். நகரப்பகுதிகளிலுள்ள சனத்தொகை 1970 இல் இருந்து 1978 வரை 50%தால் உயர்ந்தது. நாட்டின் சனத்தொகை 2,400,000 ஆக இருந்த பொழுது நகரப்பகுதிகளில் 1,265,000 மக்கள் வாழ்ந்தனர். இது தொழிலாளர்களின் பெருக்கத்தை மட்டும் காட்டவில்லை. நகரங்களை அண்டி வாழ்ந்த வேலையற்றோர், அரைப்பாட்டாளிகள் ஆகியோரும் இதில் அடங்குவார்கள். விவசாயக் கூலிகளாக வேலைசெய்த 300000 பேர்களில் பெரும்பாலோர் பெண்களும் பிள்ளைகளுமாக இருந்தனர். இவர்கள் அதீதமானசுரண்டலுக்குள்ளாகியிருந்தார்கள். பருத்தி உற்பத்தியிலை வளமற்ற நிலங்களுக்கு உணவு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டதால் உணவு உற்பத்தியில் பெரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிப்புகள் ஏற்பட்டன. இது மக்கள் மத்தியில் போசாக்கின்மையையும் வறுமையையும் பட்டினியையும் உருவாக்கியது.

## வர்க்க உள்முரண்பாடுகள்

மொத்த சனத்தொகையில் 1.5%மாக இருந்த நிலஉடைமையாளர்களிடம் 41.2% மான வளமான நிலங்கள் இருந்தன. இதில் 25%க்கும் மேலான நிலத்தை சமோசாவின் குடும்பத்தினர் தமக்குச் சொந்தமாக வைத்திருந்தனர். மறுபுறத்தில் 78.2%மான விவசாயிகளிடம் 17.7%மான நிலங்களே பயிர் செய்வதற்காக இருந்தது. இவை அனேகமாக வளமற்ற நிலங்களாக இருந்ததனால் பெரும்பாலானவர்கள் தமது உடலுழைப்பிலேயே சீவியம் நடத்த வேண்டியவர்களாக இருந்தனர். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் தேசிய முதலாளிகள் தமது இலாபங்களைப் பெருக்கவும், தொழில் துறை, விவசாயம், வங்கிகள் ஆகியவற்றில் தமது செல்வாக்கை ஸ்திரமாக்கவும் முயற்சிகள் செய்தனர். ஆனால் அரசாங்கத்தினால் சமோசா குடும்பத்தினருக்குக் கொடுக்கப்பட்ட அமிதமான சலுகைகள் முதலாளிகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. அமெரிக்க மூலதனத்துடன் அமெரிக்க கலாச்சாரமும் நாட்டின் கல்வி, கலை, கலாச்சாரங்களை மேலும் சீரழித்தது. முதலாளிவர்க்கத்தினர் சமோசாவின் குடும்பத்தினரின் செல்வாக்கை எதிர்த்தாலும் மக்களைச் சுரண்ட வசதி செய்யும் பொருளாதார அமைப்பையோ அல்லது பாட்டா

www.tamilarangam.net

ளிகளை ஒடுக்கும் அரசையோ அதன் தேசியகாவற்படைகளின் ஒடுக்குமுறைகளையோ மாற்ற விரும்பவில்லை. தமது இலாபத்திற்கு இடையூறாக இருக்கும் சமோசாவை அகற்றுவதுதான் அவர்களின் அரசியலாக இருந்தது.

1967ல் முதலாளித்துவ எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்காக அனஸ்டாசியோ சமோசா காசியா வின் மகனான அனஸ்டாசியோ சமோசா டெபெலே ஒரு ஊழல் மிகுந்த தேர்தல் மூலம் தன்னை ஜனாதிபதியாக்கிக் கொண்டான். ஆனால் தொடர்ந்த பொருளாதாரக்குழப்பங்களையும் மக்கள் எழுச்சிகளையும் கட்டுப்படுத்த முடியவில்லை. உலக சந்தையின் குழப்ப நிலைமைகளினாலும் விவசாய அழிவுகளாலும் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவுகளைச் சமாளிக்கவும், தமது இலாபங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் "மாபியா" சர்வதிகார ஆட்சிமுறை மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. 1972ல் ஏற்பட்ட பூமிஅதிர்ச்சி நிலைமைகளை மேலும் மோசமாக்கியது.

1969க்கும் 1974க்குமிடையில் தலைநகரான மானகுவாவில் 34%மான தொழிற்சாலைகள் மூடப்பட்டன. 1974-1975ல் தேசிய உற்பத்தி 2.2%மாக உயர்ந்ததாக அரசு கூறியது, ஆனால் சனத்தொகைப் பெருக்கத்துடன் ஒப்பிடும் பொழுது, அது பூச்சியத்திற்கும் கீழான வளர்ச்சியை, உண்மையில் பெரும் வீழ்ச்சியையே காட்டியது.

சமோசாவின் சர்வதிகார ஆட்சி மக்களிடமிருந்தும் மற்றைய தேசியமுதலாளித்துவ சக்திகளிடமிருந்தும் தனிமைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டுக்கொண்டிருந்தது. தேசிய முதலாளித்துவ சக்திகள் வெகுஜன எழுச்சிகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு ச்மோசாவை வெளியேற்றியபின் தமது வர்க்கநலன்களைப் பாதுகாக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண் டிருந்தன.

## சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி.

---

1927ல் இருந்து 1933 வரை ஆகஸ்டோ சீசர் சன்டினிஸ்டா தலைமைதாங்கிய ஆயுதப்போராட்டம் சர்வதிகாரத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்குமெதிராகவே அமைந்திருந்தது. நிக்கரகுவா ஆளும்வர்க்கங்களின் அதிகாரங்களெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமே தங்கியிருந்ததனால், ஆளும் வர்க்கங்களுக்கெதிரான போராட்டங்களெல்லாம் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டங்களாகவே அமைந்திருந்தன. 1934ல் ஆகஸ்டோ சீசர் சன்டினிஸ்டா கொலை செய்யப்பட்ட பின்பு 1956 காலப்பகுதி வரைக்கும் போராட்டங்களில் பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன. ஒடுக்குமுறைகளுக்கெதிராக ஆங்காங்கே மக்கள் எழுச்சிகள் ஏற்பட்டாலும் முறையான வழிகாட்டலின்றி அவை தடுமாறிக் கொண்டிருந்தன. மக்களை சரியான போராட்டப்பாதையில் இட்டுச்செல்லக் கூடிய ஒரு அரசியல் தலைமையே அவசியமாக இருந்தது. நாட்டின் இவ்வாறான புறநிலைக்காரணிகளினாலும் வெற்றிபெற்ற கியூபாப்புரட்சியின் தாக்கத்தினாலும், 1961ம் ஆண்டு ஜூலை

www.tamilarangam.net

மாதம் சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. நிக்கரகுவா சோசலிசக்கட்சியிலிருந்து வெளியேறிய கார்லோஸ் பொன்சேக, தொமஸ்போர்கே ஆகியோர்கள் தலைமை தாங்கினார்கள்.

முன்னணியின் நோக்கங்கள் பற்றிக் கூறுகையில், கார்லோஸ் பொன்சேக, "... சீர்திருத்தவாத முதலாளித்துவ தலைமைகளுக்குப்பதிலாக மக்கள் தலைமையை உருவாக்குவது எமது இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. ஏகாதிபத்தியத்திற்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் எதிரான போராட்டத்தை தொழிலாளர்களினாலும் விவசாயிகளினாலுமே முன்னெடுக்க முடியுமென நாம் நம்பினோம். தொழிலாளர்களும் விவசாயிகளும் போராட்டத்தின் அடித்தளமாக இருந்த வேளையில், நிக்கரகுவாவின் சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைமைகளில் ஆயுதப்போராட்டத்தின் மூலமே புரட்சிகரமான சமூகமாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்பதில் நாம் உறுதியாக இருந்தோம்" என விளக்கினார்.

சன்டினிஸ்டா முன்னணியின் ஆயுதப் போராட்டம் கோகோ ஆற்றுப்பகுதியில் 1963ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பநடவடிக்கைகள் தோல்விகளிலேயே முடிவடைந்தன. ஆனால் இந்தத் தோல்விகள் அபிவிருத்திக்கான பாடங்களாக அமைந்தன. இதன் விளைவாக கிராமப்புறங்களில் நகரங்களிலும் போராளிகளுக்கு ஆதரவான தளங்களை உருவாக்குவதில் ஈடுபட்டனர். இரகசிய அமைப்புகளும், சிறு பயிற்சிப்பள்ளிக்கூடங்களும்

www.tamilarangam.net

உருவாகின. சன்டினிஸ்டா பிரசார வெளியீடுகள் மக்கள் மத்தியில் வினியோகிக்கப்பட்டன.

இவ்வாறான வெகுசனத்தொடர்புகள் மூலம் நகரங்களை அண்டியப்பகுதிகளிலும், தொழிற்சாலைகளிலும், மாணவர்கள் மத்தியிலும் ஆதரவான தளங்கள் உருவாகின. கிராமிய சங்கங்களில் ஆதரவாளர்கள் பெருகினார்கள். சன்டினிஸ்டா வெகுசன அமைப்புகளான மக்களின் பிரசைகள் குழுக்களும், புரட்சிகரமாணவர் சங்கமும் உருவாக்கப்பட்டன. குடியரசு இயக்கத்துடனும் நிகரகுவா சோசலிசக்கட்சியுடனும் வைத்திருந்த தற்காலிக கூட்டுக்களும் பிரசாரத்திற்கு உதவின.

சன்டினிஸ்டா இயக்கம் தனது அரசியல் திட்டத்தின் அடிப்படைகளையும் இக்காலத்திலேயே நிர்மாணிக்க ஆரம்பித்தது. "போகோ" சித்தாந்தத்தின் அடிப்படையிலான ஆயுதப்போராட்டங்களிலும் தமது விமர்சனங்களை முன்வைத்தனர். மக்களுடன் தொடர்புகளற்ற ஆயுதம் தாங்கிய குழுக்களின் 'கெரிலா' த்தாக்குதல்கள் மூலம் சமூகமாற்றத்திற்கான புரட்சிகர போராட்டங்களில் வெற்றிபெற முடியுமென்ற நம்பிக்கை கியூபாப்புரட்சியின் பின்பு, எழுத்தாளர் ரெஜிஸ் டாபரேயின் "புரட்சியினுள் புரட்சி " என்ற நூலின் பிரசாரத்தினாலும் லத்தீன்அமெரிக்காவில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

கார்லோஸ் பொன்சேகாவும் அவரது தோழர்களும் அனுபவரீதியாக இந்தச் சித்தாந்தத்தை விமர்சித்ததுடன் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்களிப்புடன் கூடிய ஒரு ஆயுதப்போராட்டத்திற்கான வழி முறைகளையும் தேர்ந்தெடுத்தார்கள்.

மக்கள் மத்தியில் தமது அரசியல் வேலைகளை ஆரம்பித்த சன்டினிஸ்டா முன்னணியினர் அவர்களின் அன்றாட தேவைகளுக்கான போராட்டங்களிலும் பங்குகொண்டனர். வாழ்க்கைத்தரம், குடிதண்ணீர், மின்சாரம், வைத்தியவசதிகள் ஆகியவற்றிற்கான போராட்டங்களில் பங்குகொண்டனர். இவைகள் தான் தங்களுடைய இறுதி இலக்கு என்ற தவறுக்குள் அவர்கள் விழுந்துவிடவில்லை. மக்கள் மத்தியிலிருந்து சிறந்த போராளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், அவர்களுக்கு அமைப்பாகுதலின் அவசியத்தை உணர்த்துவதற்கும் சன்டினிஸ்டா முன்னணியினர் இந்தப்போராட்டங்களைப் பாவித்தனர்.

சிறைக்கைதிகளை விடுவிக்க எடுக்கப்பட்ட வெகுசனப்போராட்டங்களின் மூலம் உயர்வுள்ள சிறந்தமாணவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. 1973களில் தொழிற்சங்க அமைப்புகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

1970ல் இருந்து 1974 டிசம்பர் வரை இப்படியான அமைதியான மக்கள் சக்தி சேர்க்கும் காலமாகப் பயன்படுத்தப்பட்டது.

## கஸ்டலோவின் மாளிகையில் முற்றுகை

1974 டிசம்பர் 24ம் திகதி சமோசாவின் ஆதரவாளனை ஜோசேமாரியா கஸ்டலோ அமெரிக்கன் தூவருக்கு தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாளிகையில் விருந்துபசாரம் நடத்தினர். சன்டினிஸ்டாப்போ
ராளிகள் அந்த மாளிகையை முற்றுகையிட்டு 30க்கும் மேற்
பட்ட மந்திரிகளையும் சமோசா ஆதரவாளர்களையும் பண
யக்கைதிகளாக்கினர்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், சன்டி
னிஸ்டா முன்னணியினரின் புரட்சிகர அரசியல் அறிக்கைகள்
நாட்டின் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகிய
ற்றில் வெளியிடப்பட வேண்டும், 10 லட்சம் டாலர்களும்
கைதிகளையும் போராளிகளையும் கியூபாவிற்கு ஏற்றிக்கொ
ண்டு செல்வதற்கு விமானமும் தரப்பட வேண்டுமென்ற கோ-
ரிக்கைகளை போராளிகள் முன்வைத்தனர்.

மூன்றுநாட்கள் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின் சமோசா
கோரிக்கைகளுக்குச் சம்மதித்தான். இந்த நடவடிக்கை சன்
டினிஸ்டா முன்னணியினருக்கு பெரும் பிரசார வெற்றியாகவும்
சர்வதேச அவதானத்தைப்பெற்ற நடவடிக்கையாகவும்
அமைந்தது. சமோசாவின் சர்வதிகாரத்தை எதிர்த்துப் போ-
ராடக்கூடிய சக்தி சன்டினிஸ்டா முன்னணிதான் என்பதையும்
மக்களுக்கு உணர்த்தியது.

1975களில் பரவலான போராட்டங்கள் முன்னெடுக்கப்ப
ட்டன. சர்வதிகாரத்தின் ஒடுக்குமுறைகளும் அதிகரித்தன.
முன்னணியின் தலைவர்களான கார்லோஸ் பொன்சேகா, எடுஅ-
ர்டோ கொன்றிறாஸ் ஆகியோர் களத்தில் மடிந்தனர். இதை

www.tamilarangam.net


த தொடர்ந்த பல போராளிகளின் இழப்புக்கள் தொடர்ந்தன. போராட்டத்தின் அவசியத்தினால் ஏற்பட்ட தொழிற்பிரிவுகளும் மலைகள், காடுகள், நகரங்கள் எனப்பிரிந்தும் தனித்தும் வாழ்ந்த போராளிகள் மத்தியில் அவரவர்களின் அனுபவ அடிப்படைகளினாலும் வேறு காரணிகளினாலும் வெவ்வேறான கருத்துக்கண்ணோட்டங்கள் உருவாகின.

அமைப்பின் வளர்ச்சியுடன் இந்த வேறுபட்ட கருத்துக்குழுக்களுக்கிடையில் நடைபெற்ற விவாதங்களும் கூர்மையடைந்தன. இக்குழுக்களுக்கிடையிலான கருத்துவேறுபாடுகள் சர்வதிகாரத்திற்கெதிரான போராட்டத்தில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் பற்றியவையாகவே இருந்தன. ஆயுதப் போராட்டம், வெகுசனங்களை அணிதிரட்டல், நகர்ப்பகுதித்தொழிலாளர்களை அணிதிரட்டல், விவசாயிகளின் பங்கு, குட்டிமுதலாளித்துவ சக்திகள் மத்தியில் ஏற்படும் முற்போக்கான கருத்து மாற்றங்கள், முதலாளித்துவக்கட்சிகளுடனான ஒப்பந்தங்கள் ஆகியவை பற்றியதாக இருந்தன.

'நீண்டகால மக்கள் போராட்டக்குழு'வும் 'பாட்டாளிவர்க்கப் போராட்டக்குழு'வும் தம்மை மார்க்சியக்குழுக்கள் என அழைத்துக் கொண்டன. நீண்டகால மக்கள் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்த குழுவினர் சீன மற்றும் வியட்னாம் ஆசிய நாடுகளின் அனுபவங்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென விரும்பினர். விடுதலைப் போராட்டமானது கிராமங்களில் பலமான தளங்களைக் கொண்டிருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





மேலே....
சர்வாதிகாரி சமோசா

1979 ஜூலை 19
சன்டினிஸ்டா போராளிகள் மனாகுவா நகருக்குள் வெற்றிக் கோஷங்களுடன் பிரவேசிக்கின்றார்கள்.

கட்டுவிடுமெனவும், ஆயுதப்பலத்துடன் நகரங்களைச் சூழ்ந்த தீர்க்கமான தாக்குதல்களை மேற்கொள்ளுவதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமெனவும் நம்பினார்கள்.

'பாட்டாளி வர்க்கக்குழு'வினர் நகரங்களிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் வாழும் தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள் இயக்கத்தினர் மத்தியில் தயாரிப்பு வேலைகளைச் செய்வதைப் பிரதானமாகக் கருதினர். இவ்வாறு செய்யப்படும் தயாரிப்புகளுடன் ஏற்படும் மக்கள் எழுச்சியும், சன்டினிஸ்டாப் போராளிகளின் தாக்குதல்களும் அதிகாரத்தைக்

www.tamilarangam.net

கைப்பற்ற உதவுமென நம்பினர்கள். இவர்கள் முதலாளித்துவக் கட்சிகளுடன் செய்துகொள்ளப்பட்ட சகல ஒப்பந்தங்களையும் எதிர்த்ததுடன் அக்கொள்கையைப் பின்பற்றிய மூன்றாவது குழுவினரான 'ரெசிரஸ்ராஸ்'சை கடுமையாக விமர்சனம் செய்தனர்.

மூன்றாவது குழுவினரான 'ரெசிரஸ்ராஸ்' அதிகமான ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் முதலாளித்துவ எதிர்க்கட்சிகளுடனும் உறவுகள் வைத்திருந்தனர். இவர்களுடைய குழுவிலேயே அதிகமான அங்கத்தவர்கள் இருந்தனர்.

இவ்வாறான கருத்து வித்தியாசங்கள் இருந்த போதிலும் தமது இயக்கமாக சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியைக் கட்டி வளர்ப்பதில் ஒற்றுமையாக இருந்தனர். அவர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் விவாதங்கள் முன்னணியின் அரசியல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன.

சன்டினிஸ்டா முன்னணியின் ஆரம்ப தலைவர்களில் ஒருவரான தோமஸ் போர்கே, முன்னணியினுள் நிலவிய இந்தக்கருத்து வித்தியாசங்களையும் விவாதங்களையும் பற்றிக்குறிப்பிடுகையில் பின்வருமாறு விபரித்துள்ளார், "இந்த அனுபவங்களை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். பரவலாகப்பிரிந்து இயங்கிய எமது தோழர்களுக்கு ஏற்பட்ட தனித்துவமான அனுபவங்களினால் இந்தக் கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டன என நாம் எண்ணினோம். கருத்து வித்தியாசங்களினால் புரட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோமஸ் போர்கே

மின் தன்மை பாதிக்கப்படவில்லை, வேற்றுமைகள் மத்தியிலும் நாம் ஐக்கியப்பட்டிருந்தோம். இதனால் நிகரகுவாப்புரட்சியாளர்கள், லத்தீன் அமெரிக்க மக்களுக்கு அரசியல் அனுபவ முதிர்ச்சியென்றால் என்ன என்பதற்கு உதாரணமாக விளங்கினார்கள்.

எமது சரித்திரத்தில் ஒரு காலத்தில் எம்முள் கருத்துவேற்றுமைகள் இருந்தன. இருந்தும் எமது அரசியல் முதிர்ச்சியினால் ஐக்கியப்பட்டுப் போராட முடிந்தது.. இதுவே மிக முக்கியமான விடயமாகும். வரலாற்று மாற்றங்கள் முரண்பாடுகள் ஊடாகவே வளர்ச்சி பெறுகின்றன என்பதையும், அரசியல் இயக்கமானது வர்க்கப் போராட்டத்திற்கான கருவிதான் என்பதையும் உணராதவர்கள்தான், இந்தக் கருத்து வேற்றுமைகளின் விளைவாக சன்டினிஸ்டா முன்னணி கோஷ்டிகளாகப் பிரிந்து, தனித்தனி மோதல்கள் மூலம் வெகுசனப் போராட்டத்தை சின்னபின்னப்படுத்தி சர்வதிகாரத்தின் மீது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டார்கள் என்று எண்ணினார்கள்..... மூன்று அரசியல் கருத்துடையவர்களும் 'சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி' என்ற பெயரிலேயே இயங்கினார்கள். "சுதந்திரத்தாயகம், அல்லது மரணம்" என்ற கோசத்தினால் அவர்கள் ஐக்கியப்பட்டிருந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே களத்தில் போரிட்டு ஒன்றாகவே இரத்தம் சிந்தினார்கள்.

...மக்கள் ஒரு 'சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி'

யையே அறிந்திருந்தார்கள்..."

• • • •

1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி 'லாபிறென்சா'

என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியரான பெட்ரோ ஜோகிம்

சமோரா, சமோசாவின் சர்வதிகாரஅரசினால் படுகொலை

செய்யப்பட்டான். இதனால் முதலாளித்துவ எதிர்க்கட்சிகளும்,

ஏகாதிபத்தியவாதிகளும் சமோசாவிற்குப் பதிலாக ஆளும்

வர்க்கத்தின் பிரதிநிதியாக பதவிக்குக் கொண்டுவர இருந்த

ஒருவனை இழந்தனர்.

1974ல் இருந்து பெட்ரோ ஜோகிம் சமோரா, முதலாளித்துவ

கட்சிகளுள் பெரும் பகுதியினரை, 'விடுதலைக்கான ஜனநாயக

முன்னணி' என்ற அமைப்புக்குள் கொண்டுவந்திருந்தான்.

'லா பிறென்சா' பத்திரிகை மூலமாக சமோசாவின் சர்வ

திகாரத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்துகொண்டிருந்த

ஜோகிம் சமோரா, சமோசாவிற்குப் பதிலாக முதலா

ளித்துவத்திற்குத் தலைமைவகிக்க கூடியவனாக இருந்தான். அவனு

டைய கொலை முதலாளித்துவத் தலைமைகளைக் குழப்பத்தில்

ஆழ்த்தியதுடன் வெகுஜனப்போராட்டங்களுக்கு புதிய உத்வே

கத்தையும் அளித்தது.

விடுதலைக்கான ஜனநாயக முன்னணி (UDEL), ஜனவரி 24ம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி ஒரு தொழில்கொள்வோர் (முதலாளிகள்) வேலைநிறு த்தத்திற்கு அழைப்புவிடுத்தது. இதனால் தொழிற்நிலையங்கள் ஸ்தம் பிதமடைந்தன. நிலஉடமையாளர்களின் பழமைவாதக்கட்சி சமோசாவின் மிதவாதக்கட்சியுடனான தொடர்புகளைத் துண் டித்துக் கொண்டது. ராணுவ ஒடுக்குமுறைகளையும் மீறி மட் டகல்பாவிலும், மானகுவாவிலும் மக்களின் ஊர்வலங்கள் நடை பெற்றன. சன்டினிஸ்டா முன்னணி இந்த ஊர்வலங்களில் அரசிய லரீதியாகக் கலந்துகொண்டது.

பெப்ரவரி மாதத்தில் கிரனடா, றிவாஸ் ஆகிய இடங்களில் சன்டினிஸ்டா ஆயுதம் போராளிகள் தேசிய காவற்படைத் தளங்கள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொண்டனர். மாசயா, லியோன் ஆகிய பகுதிகளில் மக்களின் ஆயுதஎழுச சிகள் ஏற்பட்டன. இவற்றுடன் சன்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியினருக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டுவந்த செல்வா க்கும் முதலாளித்துவத் தலைமைகளை கதிகலங்க வைத்தன. வெகுசன எழுச்சிகளையும் புரட்சிகரஇயக்கத்தின் வளர்ச்சி யையும் கட்டுப்படுத்த, முதலாளித்துவ தலைமைகள் சமோ சாவின் சர்வதிகாரத்தைப் பேச்சுவார்த்தை மூலமாக அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர்.

1978 ஜூலை மாதம் பரந்துபட்ட ஐக்கிய முன்னணி (FAO) ஒன்று உருவாக்கப்பட்டது. நிக்கரகுவா ஜனநாயக முன்னணி, விடுதலைக்கான ஜனநாயக முன்னணி, பன்னிருவர் (முக்கிய பிரஜைகளும், புத்திஜீவிகளும் அடங்கிய) குழு ஆகியவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைந்திருந்தன. பன்னிருவர் குழுவுடன் சன்டினிஸ்டா முன்னணியிலுள்ள 'ரெசிஸ்ரென்ராஸ்' குழுவினர் தொடர்புகள் வைத்திருந்தனர். இந்த முயற்சிகளுக்கு மத்தியில் கத்தோலிக்கத்திருச்சபை சர்வதிகாரி சமோசா பதவி விலக வேண்டுமென கோரிக்கை விடுத்தது. ஆனால் சர்வதிகாரி சமோசா எந்தவிதமான கோரிக்கைகளுக்கும் செவிமடுக்காது தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தான்.

தேசிய மாளிகை முற்றுகை.

1978 ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி மனகுவாவிலுள்ள 'தேசியமாளிகை'யை சன்டினிஸ்டாப் போராளிகள் கைப்பற்றி அங்கு கூடியிருந்த சமோசா அரசாங்கத்தின் பிரதிநிதிகளைப் பணயக்கைதிகளாக்கினார்கள்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், சன்டினிஸ்டா முன்னணியின் அறிக்கைகள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வாசிக்கப்பட வேண்டும், அப்பொழுது வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த ஆஸ்பத்திரித் தொழிலாளர்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும், கைதிகளும் போராளிகளும் வெளியேறுவதற்கான விமானம், நூறு லட்சம் டாலர்கள், அத்துடன் 'தேசியமாளிகை'யை அண்மித்து 300 மீட்டருக்குள் தேசியகாவற்படையினர் இருக்கக்கூடாது என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

சமோசா பேச்சு வார்த்தைகளை இழுத்தடித்தான். 'தேசிய

www.tamilarangam.net

மாளிகை 'மீது அரசவிமானங்கள் குண்டுகளை வீசின. சமோசா கோரிக்கைகளுக்கு சம்மதிக்கா விட்டால் பணயக்கைதிகள் ஒவ்வொருவராகக் கொல்லப்படுவார்கள் எனப் போராளிகள் அறிவித்தனர். தேசிய மாளிகையினுள் சிக்கிய பெண்களும் பிள்ளைகளும் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். 24ம் திகதி சமோசா கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டான்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த போதிலும் போராளிகளும், விடுதலை பெற்ற கைதிகளும் விமானநிலையத்திற்குச் சென்ற பாதையோரங்களில் மக்கள் குழுமிநின்று கரகோசம்செய்து அவர்களை வாழ்த்தினார்கள்.

சர்வதிகாரத்திற்கெதிரான போராட்டத்தை சன்டினிஸ்டா முன்னணியிலேயே நடத்த முடியுமென மக்கள் உணர்ந்தனர். மக்களை தம்பால் இழுப்பதற்காக முதலாளித்துவ 'பரந்தபட்ட முன்னணி' 25ம் திகதி முதலாளிகள் வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்புவிடுத்தது. இந்தக்கதவடைப்புக்கள் மக்களையும் தொழிலாளர்களையுமே வெகுவாகப்பாதித்தது. இதனால் வெகுசன அமைப்புக்கள் முதலாளித்துவத் தலைமைகளிடமிருந்து விலக ஆரம்பித்தன."

## வெகுசன எழுச்சி

செப்டம்பர் மாத ஆரம்பத்திலிருந்து சன்டினிஸ்டா போராளிகளின் தாக்குதல்கள் லியோன், எஸ்டெலிப், மாசயா, சின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

னடெகா ஆகிய பகுதிகளில் ஆரம்பமாகின. இதைத்தொடர்ந்து மக்கள் எழுச்சிகளும், அதிகாரங்களைக் கைப்பற்றும் நிலைமைகளும் உருவாகின.

சமோசா சர்வதிகாரத்தின் எதிர்தாக்குதல்கள் கொடூரமான முறைகளில் நடைபெற்றன. மக்கள் குடியிருப்புகள் மீது விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. தேசிய காவற்படையினரால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சமோசா தற்காலிகமாக வெற்றியடைந்துவிட்டான் என்ற நிலைமைகள் ஏற்பட்டன. ஒரு தீர்க்கமான ஆயுதமோதலின் மூலமே சர்வதிகார ஆட்சியை அகற்றலாமென மக்கள் உணர்ந்தனர்.

சன்டினிஸ்டா முன்னணியின் தலைமையில், தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் கட்சிகள், மாணவர் அமைப்புக்கள், ஆகியவை அடங்கிய மக்கள் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. இதன் வழி நடத்தலில் மக்கள் கமிட்டிகள், மக்களின் ஆயுதக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன, உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டன, வீதித்தடைகள் போடுவதிலும், தெருப்போராட்டங்களிலும், ஆயுதப்பாவனைகளிலும் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற அடக்குமுறைகளின் போது நகரங்களை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சன்டினிஸ்டா அணிகளில் இணைந்து கொண்டனர்.

www.tamilarangam.net

இவ்விதமான மக்கள் தயாரிப்புக்களின் மத்தியில், அமெரிக்க ஜனாதிபத்தியமும் டொமினிக்கன் குடியரசும், குவாத்தமாலா அரசாங்கமும் முதலாளித்துவ ஐக்கிய முன்னணியூடாக சர்வாதிகார அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தன. அமெரிக்காவின் தலையீட்டை விரும்பாத 'பன்னிருவர் குழு'வும் அவர்களுடன் 'ரெசிஸ்ரான்ஸ்' குழுவினரும் இந்த முன்னணியிலிருந்து விலகினர்கள். இந்தப் பேச்சுவார்த்தைகள் எந்தவிதப் பலனையும் தரவில்லை. முதலாளித்துவ தலைமைகள் தமது செல்வாக்கைப் படிப்படியாக இழக்க ஆரம்பித்தனர். இதற்குப் பதிலாக தேசப்பற்று முன்னணி உருவாகியது.

சன்டினிஸ்டா முன்னணியின் தலைமையில் இயங்கிய வெகுசனஇயக்கங்களையும், தொழிற்சங்கங்களையும் கொண்ட மக்கள் ஐக்கிய இயக்கம் (M PU), இரு தொழிற்சங்க சமேளனங்கள், 'பன்னிருவர் குழு' ஆகியவை இணைந்து தேசப்பற்று முன்னணி (FPN)யை உருவாக்கினர்.

இந்த முன்னணி 1979 ஜனவரி 10ம் திகதி 'லா பிறன்சா' பத்திரிகை ஆசிரியர் சமோரு வின் ஞாபகார்த்தமாக தலைநகரான மானகுவாவில் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியது. மாலை தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றன. இவ்வாறு உருவான போராட்டங்களில் மூன்று விடயங்கள் முக்கியத்துவம் பெற்றன."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாவதாக தேசப்பற்று முன்னணி தனது போராட்டக் கோரிக்கைகளாக, சர்வதிகாரி சமோசாவின் சொத்துக்கள் யாவும் சுவீகரிக்கப்பட வேண்டும், தேசியகாவற்படை படை கலைக்கப்பட வேண்டும், என்பனவற்றை முதலவைதாக முன்வைத்தன.

மக்கள் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பினூடாக சன்டினிஸ்டா முன்னணியினர் சகல வெகுசன அமைப்புக்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்ததுடன் பரந்துபட்டமுறையில் மக்கள் பங்குகொள்ளும் செயற்பாட்டுக்குழுக்களையும் அமைக்க முடிந்தது.

முதலாளித்துவ முன்னணியிலிருந்து 'ரெசிர்ஸ்ராஸ்' குழுவினர் பிரிந்தபின்பு சன்டினிஸ்டா முன்னணியிலுள்ள சகல அரசியல் குழுக்கள் யாவும் ஒன்றிணைந்து செயற்படுதல் இலகுவாகியது.

1979 மேமாத இறுதிப்பகுதியில் சன்டினிஸ்டா போராளிகள் பலமுனைகளிலும் ஆயுததாக்குதல்களை ஆரம்பித்தனர். நகரங்களில் இருந்த ஆயுதப்படையினர் இதனால் பனதிக்குகருக்கும் இடம் பெயர்ந்தனர். ஜூலை 4ம் திகதி சன்டினிஸ்டாமுன்னணியினர் ஒரு பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்புவிடுத்தனர். நாட்டின் சகல பகுதிகளும் ஸ்தம்பிதமடைந்தன. தொடர்ந்த நாட்களில் சினன்டெகா, லியோன், மட்டகல்பா, எஸ்டலி, மாசயா, கிரனடா, கார்சசோ, ஆகிய இடங்களில்

www.tamilarangam.net




XXVI

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் ஆயுத எழுச்சிகள் ஏற்பட்டன. சகல பகுதிகளிலும் ஏற்பட்ட மக்கள் பாதுகாப்புக் கமிட்டிகள் அரசியல் பிரசாரங்களைச் செய்து கொண்டிருந்தன. பெண்கள் அமைப்புக்கள் சிறிய வைத்தியசாலைகளையும், பராமரிப்பு நிலையங்களையும் அமைத்தனர். சிறிய அச்சுக்கூடங்கள் பிரசுரங்களை மக்களுக்கு வெளியிட உதவின. மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக 'மொலட்டொவ்' குண்டுகளையும் சேகரித்துக் கொண்டனர்.

ஜூன் 10ம் திகதி மானகுவாவின் அனைப்பகுதிகளில் ஆயுத எழுச்சிகள் உருவாகின. சில பகுதிகள் விடுவிக்கப்பட்டபிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டன. விமானத்தாக்குதல்களையும் பீரங்கிப்படைகளையும் எதிர்கொண்டு 18 நாட்கள் தலைநகரை மக்கள் முற்றுகையிட்டனர்.

ஜூன் 17ம் திகதி "தேசத்தை மீளக்கட்டியெழுப்பும் நிக்கரகுவா அரசாங்கம்" என்ற பெயரில் ஒரு தற்காலிக அரசாங்கம் பிரகடனப்படுத்தப்பட்டது. அது சர்வாதிகாரத்திற்கெதிரான சகல சக்திகளின் கூட்டரசாங்கமாகவே அமைந்திருந்தது.

முதலாளித்துவ எதிர்ப்புச் சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய 'லா பிறன்சா' பத்திரிகை ஆசிரியரின் விதவையான வயலட்டா பாரியோஸ் டி சமோரா, 'பன்னிருவர் குழு'வைச் சேர்ந்த செர்கிஓ ரமேர்ஸ் மேர்சிடோ, நிக்கரகுவா ஜன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாயக முன்னணியைச் சேர்ந்த அல்பன்சோ ராபெலோ க்ரானி ஜாமோ சன்டினிஸ்டா முன்னணியைச் சேர்ந்த டானியல் ஓட்டேகா மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மொய்சஸ் காசன் ஆகியோர் இந்தத் தற்காலிக அரசாங்கத்தில் அங்கம் வகித்தனர்.

ஜூன் 28ம் திகதி தமது இறுதித் தாக்குதலுக்காக சன்டினிஸ்டா முன்னணியினர் தமது போராளிகளை ஒழுங்கான முறையில் பின்வாங்க ஆணையிட்டனர். மானகுவாவிலிருந்து 28 கிலோமீட்டர் தூரத்திலுள்ள மாசயாவிற்கு 6000 போராளிகள் ஒழுங்கான முறையில் பின்வாங்கினார்கள்.

நாட்டின் மற்றைய பகுதிகளில் சன்டினிஸ்டா போராளிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் பாதுகாப்பு அமைப்புக்கள் மக்களின் அதிகாரசபைகளாக மாற்றமடைந்தன. அரசின் நிர்வாக வேலைகளை அவைகள் நடைமுறைப்படுத்தின. உணவு விநியோகம், சுகாதாரம், நகரநிர்வாகம், ஆகியவற்றை மக்கள் சபைகள் ஏற்று நடத்தின. தேசிய காவற் படையினரிடமிருந்து இவ்வமைப்புக்களைக் காப்பாற்ற மக்கள்படைகள் தயாராக இருந்தன.

சன்டினிஸ்டா முன்னணியில் ஆயுதம் தாங்கிய 5000 போராளிகளும் மக்களும் 8000 தேசியகாவற்படையினரை எதிர்கொண்டனர். தேசிய காவற்படையினர் தலைநகரையும் சமோசாவையும் பாதுகாப்பதில் மட்டுமே கவனம் செலுத்த முடிந்தது.

XXVIII

www.tamilarangam.net

மற்றைய லத்தீன் அமெரிக்க நாடுகளை ராணுவரீதியாக நிகரகுவாவில் தலையிட வைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்றது. அது பலனளிக்காது போகவே சமோசாவை நாட்டைவிட்டு ஓடுமாறு தூண்டியது. சமோசாவும் அவனது சில தளபதிகளும் ஜூலை 17ம் திகதி அமெரிக்காவிலுள்ள மியாமி நகருக்குத் தப்பிச் சென்றார்கள். பதவிக்கு வந்த சமோசாவின் உதவியாளனான உர்குயோ, அதிகாரங்களை தற்காலிக அரசாங்கத்திற்கு மாற்றும் நடவடிக்கைகளை தான் எடுக்கப் போவதாகக் கூறிக் கொண்டான். அவன் மூலமாக புரட்சிகர மாற்றங்கள் எதுவுமில்லாமல் முதலாளித்துவ சக்திகளுக்கும் தேசிய காவற்படையின் பெரும் பகுதியினருக்கும் அதிகாரத்தில் இடம்பிடிப்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமாக இருந்தது.

பிரான்சிஸ்கோ உர்குயோ, சன்டினிஸ்டா முன்னணியினர் ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றும், தன்னுடைய பதவிக்காலம் 1981 ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும் நீடிக்கும் என்றும் அறிவித்தான். சன்டினிஸ்டா முன்னணியினர் தமது இறுதித் தாக்குதல்களுக்குத் தயாராகினர்கள்.

சன்டினிஸ்டா ஆயுதப் போராளிகளும் மக்களும் சமோசாவின் வதிவிடத்தைக் கைப்பற்றி அங்கிருந்த ஆயுதங்களை மக்களுக்கு விநியோகித்தனர். ஆயிரமாயிரம் மக்கள் ஆயுதங்களுடன் காவற் படையினரை எதிர்கொண்டனர். நிலைகுலைந்த காவற்படையினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




[illegible]     [illegible] சி     ஜாஜமி வீலாக

அண்டை நாடான கொண்டுராசுக்கும் எல்சல்வடோருக்கும் ஓடித்தப்பினார்கள். ஜூலை 19ம் திகதி பிரான்சிஸ்கோ உர்குயோவும் மிகுதித்தளபதிகளும் தலைநகரைவிட்டுத் தப்பியோடினார்கள் சன்டினிஸ்டா ஆயுதப்படையினர் மானகுவா நகரத்திற்குள் பிரவேசித்தனர். "தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் நிக்கரகுவா அரசாங்கம்" அதிகாரத்திற்கு வந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இருந்த சமோசாவின் சர்வதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

(அடுத்த இதழில் சன்டினிஸ்டா ஆட்சியும் ஏகாதிபத்திய எதிர்புரட்சியும்)

XXX

www.tamilarangam.net

# ஒரு வங்கத்தின் வரலாற்றுக் குறிப்புக்கள்.

## இங்கிலாந்தில் தொழிற்புரட்சி. (1760 - 1840)

18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் தொழிற்புரட்சி ஆரம்பமாகியது. பண்டமாற்று முறையின் பல இடர்களை நிவர்த்தி செய்யத் தோன்றிய 'பணம்' மக்கள் மத்தியில் பல ஆண்டுகளுக்கு முன் பாவனைக்கு வந்தது. சாதாரண விவசாய உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்த பொருட்களைச் சந்தையில் விற்று அதனால் பெற்ற பணத்தைக் கொண்டு தமக்கு வேண்டிய பொருட்களை வாங்கிய நிலைமைகளிலிருந்து சில 'பணம் வைத்திருந்தவர்கள்' சந்தையில் தம்முடைய பணத்தைக் கொண்டு பொருட்களை வாங்கிப் பின் அதிக விலைக்கு அந்தப் பொருட்களை விற்று தமது பணத்தின் தொகையை (இலாபத்தை)ப் பெருக்கிக் கொண்ட பொழுது அந்தப் பணம் 'மூலதனம்' என்ற பெயரைப் பெற்றது. சோகியும் உலோகத் துண்டுகளும் பணமாகப் பாவிக்கப்பட்ட காலங்களிலிருந்து வெள்ளியும் பொன்னும் பணமாகப் பாவிக்கப்பட ஆரம்பிக்கப்பட்ட பொழுது, வெறும் வியாபாரத்தில் மட்டுமல்லாமல் வேறு வழிகளிலும் பணம் தேடும் முயற்சிகள் ஆரம்பித்தன. வாடகை, வட்டி, கடற்கொள்ளை, அடிமை வியாபாரம் ஆகியவற்றின் மூலமாகவும் பணமூலதனம் குவிக்கப்பட்டது.

பணமூலதனத்தை அதிகமாக வைத்திருந்த பிரித்தானிய நிலப்பிரபுக்கள் தமது நில உடமைகளைப் பெருக்கிக் கொண்டு சிறிய விவசாயிகளை கூலிகளாக நகரங்களுக்கு விரட்டினார்கள். கடற்கொள்ளைகளிலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாடுகளுடனான வாணிபத்திலும் தமது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட நகர முதலாளிகள் இவர்களைக் குறைந்த கூலியில் வேலைக்கு அமர்த்தினர்கள். நகரங்களில் அதிகமான உற்பத்தி நெசவாலைகளில் நடைபெற்றது. இக்காலத்தில் வளர்ச்சியடைந்த நிலக்கரி உற்பத்தித் தொழிலும், நீராவி யந்திரமும், புகையிரதப் போக்குவரத்தும் தொழில் வளர்ச்சிக்கு மேலும் உதவின.

இந்தியாவையும் லத்தீன் அமெரிக்க நாடுகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிரித்தானிய அரசு அந்த நாட்டு தனி உற்பத்தி முறைகளை நாசமாக்கி, அந்த நாடுகளை தமது பண்டங்களுக்குச் சந்தையாக மாற்றியது. 1820ல் 110 லட்சம் யார் துணியை இறக்குமதி செய்த இந்தியா 1840ல் 1450 லட்சம் யார் துணிக்குச் சந்தையாகியது. இவ்வாறாக அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் சந்தையிலே இங்கிலாந்தின் தொழில்கள் பெரும் வளர்ச்சியடைந்தன.

இந்த வளர்ச்சி முதலாளிகளின் இலாபத்தைப் பெருக்கிய அதே வேளையில் வறுமையும் பிணியும் பிடித்த தொழிலாளர்களையும் பெருக்கியது. பிரெட்ரிக் எங்கல்ஸ் இக்காலத்தில் எழுதிய 'இங்கிலாந்தில் தொழிலாளர்கள் நிலைமைகள்" (1844) என்ற நூலில் இந்தக் காலத்தை "பட்டினி போட்ட நாற்பதுகள்" என வர்ணித்தார்.

அக்காலத்து இங்கிலாந்து முதலாளிகள் (தற்போதைய எமது நாட்டு முதலாளிகள் போல) மூலதனக்குவிப்பு நிலையிலேயே இருந்ததினால் தொழிலாளர்களின் கூலிகளைக் குறைப்பதன் மூலமே தமது இலாபத்தைப் பெருக்க முயன்றனர்.

நகரத்தை அண்டிய தொழிலாளர் சேரிகளின் நிலைமைகள், "சனாம் பம்பாம்" சித்தரிப்பதைக் காட்டிலும் கேவலமாக இருந்தது.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# பச்சைப் பூக்கள்

நந்தி

நாற்பது வருட காலமாக வேலுச்சாமிக்கு மகாக்கந்தைத் தேயிலைத் தோட்டம் ஒரு பெரிய தேசம்போல் இருந்தது. தோட்டத்துப் பெரியதுரை மூன்றரை வருடத்துக்கு ஒரு முறை இங்கிலாந்து போய் வருவதுபோல், வேலுச்சாமி அதேகால இடை வெளியில் கண்டிக்குப் போய் வந்தான். அத்தனைக்கும், மகாக்கந்தைக்கும் கண்டிக்கும் உள்ள தூரம் சுமார் ஏழு மைல்கள் தாம்; கண்டியிலிருந்து பேராதனைக்கு வந்து, பின்பு மகாக்கந்தைக்குச் சிறிது ஏற்றம்.

ஆறு வருடங்களுக்கு முன் பெரியதுரை இங்கிலாந்துக்குப் போகப் பெட்டியைப் பூட்டியபோது, வேலுச்சாமியும் மூட்டையைக் கட்டி வெளியேறினான். அவனது உலகம் கொழும்பு வரை விரிந்தது.

* * *

அவனது பெற்றோரும் மனைவியும் மகளும் அந்தத் தோட்டத்திலே இறந்துபோனார்கள். அவனுடைய ஒரே ஒரு மகன் இளமையிலேயே மகாக்கந்தையை விட்டு ஓடி விட்டான்.

"நாம் பொறந்த மண் செல்வம் விளைகிற பூமி. அதை விட்டு ஓடிவிட்டான், தறுதலை. அவன் எங்கே வாழப் போகிறான்" என்று அவனைத் திட்டிவிட்டுத் தனது தேயிலைச் செடிகளை பராமரித்தான் வேலுச்சாமி. இது அந்தக் காலத்தில். அதன் பின்பு அவன் பல வருடங்களாகத் தன் மகனைப் பற்றி, உண்மையில் மகாக்கந்தைக்கு வெளியிலிருக்கும் யாரைப்பற்றியுமே சிந்திக்கவில்லை.

அவனுடைய மகள் அஞ்சலையும் அவளுடைய கொழுந்து கிள்ளும் தோழிகளும் போய்க் கொண்டிருப்பார்கள்.

"போங்க புள்ளைங்க, கொழுந்துகளைப் பார்த்துக் கிள்ளுங்க. முத்திலைகளை விட்டுடுங்க" என்பான், வேலுச்சாமி.

www.tamilarangam.net

அவர்கள் மலைகளில் ஏறுவதைப் பார்த்துக்கொண்டு அப்படியே நிற்பான். அழகிய பல வர்ண மலர்களைக் கொண்ட பூங்காவனத்தை மேலே இருந்து பார்ப்பது போல, அதே உள்ள நிறைவுடன், அவன் தனிப் பச்சைத் தேயிலைச் செடிகள் நிரம்பிக்கிடக்கும் மலைகளைக் கீழே நின்று பார்ப்பான். அவனுக்கென்ன பயித்தியமோ? அவன் அப்படி வெகுநேரம் பார்த்துக் கொண்டே ஏதோ வாய்க்குள் சொல்லிக்கொள்வான்.

தலைப் பிரசவத்தின்போது அஞ்சலை, பிள்ளை பிறக்க முடியாமல் இறந்து போனாள்.

"மலையில உன்ட தோழிகளை விட்டுட்டு போயிட்டியா மவ" என்று கதறினான் வேலுச்சாமி.

சவம் போய்க்கொண்டிருந்தது.

அன்று காலை மழை பெய்திருந்ததால் நனைந்த அந்தத் "தோழிகள்" தனது மகளுக்காக இலை இலையாக அழுததாக அவன் கற்பனை செய்தான்.

அவன் தனது வேலைகளைத் தொடர்ந்து செய்தான்; வருடங்களாக புல்லுப் பிடுங்கினான்; ஸ்டோர் வேலை செய்தான்...........நிரந்தரமாகக் கங்காணி வேலை கிடைத்தது.

அவனுடைய மனைவி சோலையம்மாளும் இறந்து வருடங்கள் எத்தனையோ. அவளைப் புதைத்த இடத்தில் இப்போது தேயிலைச் செடியொன்று கொழுத்து வளர்ந்தது. அவன் அந்தச் செடியைக் கொஞ்சம் அதிகமாக நேசித்தான். அந்தச் செடியை முத்துக் கறுப்பன் கல்வாத்துப் பண்ணிக்கொண்டிருந்தான்.

"முத்து, வேலையை நல்லாச் செய்" என்றான் வேலுச்சாமி.

"செய்யாமல் என்னண்ணே" நமக்குச் சோறுபோடுகிற செடியல்லா?" என்றான் முத்து.

"ஆமா தம்பி, அது நாட்டுக்கே சோறு போடுகிற செடி" என்று உருக்கமான பதில் வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு இரு வருடங்களுக்கு முன் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் மகாக்கந்தையும் கலந்து கொண்டது; நிர்வாகம் கண்டித்தது; 'கண்டிசன் பேசியது' கடைசியில் நாட்டின் பொருளாதார நிலையைக் காட்டிக் கெஞ்சியது. அப்போதுதான் நமது நாடு எவ்வளவு தூரம் தேயிலைச் செல்வத்தில் தங்கியுள்ளது என்று வேலுச்சாமிக்குப் புரிந்தது.

அதன்பின் தேயிலைச் செடிகளைக் கண்போல் பார்ப்பது அவன் சொந்த விஷயமல்ல; தனியே அவன் தோட்ட விவகாரமுமல்ல; தனியே அவன் கூறுவான்:

''அது இந்த நாட்டிற்கே சோறுபோடுகிற செடி''

*　　*　　*

தோட்டத்திலிருந்து ஓடிப்போன சந்தனம், வேலுச்சாமியின் மகன், கொழும்பில் கடவுளேயென்று நல்லாக இருந்தான். அவனுக்குத் துறைமுகத்தில் கூலிவேலை. ஜிந்துப்பிட்டித் தெருவில் பிள்ளைகுட்டியோடு ஒரு சிறுவீட்டில் இருந்தான். மகாக்கந்தையில் தனது தகப்பன் வேலையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டான் என்று அறிந்ததும், அங்கு வந்து, தகப்பனிடம் மன்னிப்புக்கேட்டுக் கெஞ்சி அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

''போயிட்டு வர்ரேன்'' என்று தனது சக தொழிலாளரிடம் விடைபெற்றான் வேலுச்சாமி. மலைமலையாக வாழ்ந்த, சோறுபோடும் செடிகளையும் கண் நிறையப் பார்த்துக் கொண்டு போனான்.

கொச்சிக்கடை அந்தோனியார் கோவிலுக்குத் தன் பேரப்பிள்ளைகளைக் கூட்டிப் போகும் பின்னேரங்களில் வேலுச்சாமி அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கி மேலாக துறை மதிலுக்கு முகத்தைக் காட்டுவான்.

''பாட்டா, கப்பல்லே என்ன போகுது?'' என்று கேட்பான் ஒரு பையன்.

''கப்பலிலேயா''

''ஆம் பாட்டா''

''நம்ம நாட்டுத் தேயிலை போகுது''.

www.tamilarangam.net

"தேயிலையா"

"ஆமா ஆ"

வேலுச்சாமிக்குப் பெருமையாக இருக்கும். பிள்ளைகளை வீட்டிற்குச் சாய்க்கும்போது மகாக் கந்தையைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லுவான். காலத்தால் சாகாத உபகதைகளைப் போல் தேயிலைத் தோட்டத்து வாழ்வைப் புதிய உணர்வோட்டத்தோடு விதம்விதமாகக் கூறுவான்.

மலைகள், குளிரு கம்பளம், படங்கு, லயம், பங்களா, ஸ்டோர், சாமிகோவில், தொழிலாளர்.........அப்புறம் சோறு போடும் செடிகள்!

"தேயிலை மரம் பச்சையா பாட்டா?"

"ஆமா"

"பொய்யி"

வேலுச்சாமி சிரிப்பான்.

தனது மகனின் வீட்டிற்கு முன்னால் இருக்கும் குச்சு முற்றத்திலே ஒரு தேயிலைச் செடியை வளர்க்க வேண்டும் போல் இருக்கும் அவனுக்கு. அங்கே அப்போது ஒரு தனி ரோசாச்செடி இருந்தது. இரத்த சோகை நோயாளியின் உதடுகள் போல் ஒரிரு வெளிறிய பூக்களை அது அவ்வப் போது பூக்கும். சந்தனம் தினமும் அந்தியிலே அதற்கு நீர் ஊற்றுவான்.

'பாட்டா, ரோசாச் செடி நல்ல வடிவு; ஏன்?'

வேலுச்சாமி பரிசாக முகச் சுழிப்பை முகத்தில் வலித்துக் காட்டுவான்.

"ம், உன்னுடைய தேயிலை மரம் இதிலும் வடிவா?"

"ஓ, யெஸ்"

வேலுச்சாமி பெருமையுடன் இளம் வட்டப் பேரப் பிள்ளைகளுடன் இப்படிக் குஸ்திபோடுவான்.

* * *

www.tamilarangam.net

மகாக்கந்தையிலிருந்து வந்து ஆறு வருடங்களின் பின், வேலுச்சாமி தனது மூத்த பேரனை அழைத்துக்கொண்டு கண்டிக்குப் போனான்
''கண்டிக்குப் போய் பெரஹறா பார்த்துவிட்டு, பேராதனையிலே பூந்தோட்டத்தையும் பெரிய தம்பிக்குக் காட்டிவிட்டு வர்றேன்'' என்று தனது மகனிடம் விடைபெற்றான்.

''ஆமா, படிக்கிற பையன் பார்க்க வேண்டிய விஷயங்கள் தான்'' என்றான் சந்தனம்.

போகும் வழியிலே தனது பேரனுக்கு வேலுச்சாமி கூறினான்;

''தம்பி, உனக்கு மகாக்கந்தைத் தேயிலைச் செடியைக்காட்டப்போகிறேன்.''

அவன் தொடர்ந்து விவரித்தான்:

''தம்பி, உனது பாட்டன், பாட்டி. அத்தை, மாமன் எல்லோரும் வளர்த்த செடிகள். அவற்றை நீ பார்க்க வேண்டும்.''

பையனுக்குப் பாட்டனின் இதயப் பாஷை நன்கு விளங்கும். அவன் கேட்டான்:

''ஏன் பாட்டா, அவை நமக்குச் சோறுபோடும் செடிகளல்லவா?''

வேலுச்சாமி தனது பேரனுக்குச் சுண்டல்கடலை வாங்கிக் கொடுத்தான்.

* * *

'மகாக்கந்தை தேயிலைத் தோட்டம்' என்று இருந்த இடத்தில் 'மகாக்கந்தை வீடமைப்புத் திட்டம்' என்ற பலகை தொங்கியது.

பேராதனைச் சர்வகலாசாலைப் பூங்காவில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முதலியோருக்கு பங்களாக்கள் போதாமல் போகவே, சர்வகலாசாலை நிர்வாகம் மகாக்கந்தை தேயிலைத் தோட்டத்தை வாங்கி அங்கே பங்களாக்கள் கட்டிக் கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேலுச்சாமி தனது பேரனுடன் தோட்டத்தின் வழியே போய்க் கொண்டிருந்தான். தொழிலாளரின் லயங்களிருந்த இடங்களில் பெரிய பங்களாக்கள் காணப்பட்டன. அந்த பங்களாக்களில் இருந்தவர்கள் சர்வகலாசாலை மாணவருக்கு, முக்கியமாக மாணவிகளுக்கு விடுதியளித்திருக்க வேண்டும். மாணவிகள் அசையும் பூச்சரம் போல் வந்துகொண்டிருந்தனர். கொழுந்து கிள்ளும் பெண்களை அந்தப் பாதையில் பார்த்துப் பார்த்துப் பழகிய வேலுச்சாமிக்கு, இப்போது அவ்விடம் இதற்கு முன் காணாத தேசம் போல் இருந்தது.

மேலே மலைகளைப் பார்த்தான். அங்கே வேலை துரிதமாக நடந்துகொண்டிருந்தது. புதிய பங்களாக்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். கட்டப்பட்ட பங்களாக்களுக்குமுன் அழகிய சிறு பூந்தோட்டங்கள் இருந்தன. சில பங்களாக்களின் முற்றங்களில், அவ்விடத்து மனைவிகள் ஒன்று சேர்ந்து, அந்த நேரத்திலும் பட்மின்டன் விளையாடிக் கொண்டிருந்தனர்.

''பாட்டா, தேயிலைச் செடிகள் எங்கே?'' என்று கேட்டான் பொல்லாத பேரன். சோறு விக்கியதுபோல், வேலுச்சாமியின் குரல்வளை மேலும் கீழும் எழுந்து தாழ்ந்தது; பேச்சு வரவில்லை.

தேயிலைத் தோட்டம் அழிக்கப்பட்டு விட்டது. அங்கே வேலை செய்த தொழிலாளரிற் சிலர் வேறுதோட்டத்திற்கு மாற்றப்பட்டு விட்டார்கள். சிலர் வேறு வேலை தேடிப் போய்விட்டார்களாம்.

வேலுச்சாமி, போர்க்களத்தில் தனது இதயத்தவரின் சடலங்களைத் தேடும் ஒருத்தரின் மனநிலையில், எங்கெல்லாமோ அலைந்தான்.

பையன் சந்தோஷப்பட்டான். ஒரு காலத்தில் தானும் பேராதனைப் பெரிய பாடசாலையில் படிக்க இங்கிருந்து போக வேண்டும் என்று நினைத்தான்.

வேலுச்சாமி திரும்பிப்போக எண்ணும்போது, முத்துக்கறுப்பன் இப்போது இந்த பங்களாக்களின் பூந்தோட்டக்காரன் என்பதை அறிந்தான்.

வரும் வழியிலே, முத்துக்கறுப்பன் வேலை செய்வது தெரிந்தது. அவ்விடம் வேலுச்சாமியின் மனைவி

www.tamilarangam.net

சோலையம்மாள் புதைக்கப்பட்ட இடம். ஆமாம், அதே இடத்தில் நின்ற செடியைத்தான் முத்துக்கறுப்பன் பராமரித்துக் கொண்டு நின்றான். அதையாவது தனது பேரனுக்குக் காட்டலாம் என்று நினைத்தான் வேலுச்சாமி. அவனைக் கண்டதும் முத்துக்கறுப்பன் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் ''பாரு அண்ணே, உன் பெண்டாட்டி ஞாபகமாக இந்தச் செடி வளருது'' என்றான்.

ஆனால்—

வேலுச்சாமியின் தொண்டையில் இதுவரை விக்கிக்கிடந்த துக்கம், அவன் அந்தச் செடியைப் பார்த்ததும், அழுகையாக வெடித்தது. முத்துவைக் கட்டி அணைத்து அழுதான்.

அங்கே நின்றது தேயிலைச் செடியல்ல; பூத்துச் சிரிக்கும் ஒரு ரோசாச் செடி!

—மல்லிகை 15-8-66


முக்கிய அறிவித்தல்

தற்காலிக விலாசமாற்றம்


SINTHANAI
HAUSSMANN STR.107
7000 STUTTGART 1




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனத்தின் மொழிபெயர்ப்புகள்



## அகவிடுதலை வேண்டும்

மீரா

இன்று நிலவும் பெண் ஒடுக்குமுறையைப் பற்றி பல மட்டங்களிலும் பரவலாகப் பேசப்படுகின்றது, விடுதலைக் கோஷங்கள் எழுப்பப்படுகின்றன. இந்தக் கோஷங்கள் அனைத்தும் எங்கிருந்து வருகின்றதென நோக்கினால், அவை ஒரு குறுகிய வட்டத்திலிருந்து ஒரே நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. இன்று பெண்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் எனச் சிந்திக்க ஆரம்பித்தவர்கள் தமது அகநிலையிலிருந்து விடுதலை பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். தமது நிலையை வெளிக்கொண்டுவருவதில் ஓரளவேனும் சுதந்திரமுள்ளவர்களாகத்தான் இவர்கள் இருக்கின்றார்கள். இப்பெண்கள் அதிகமாக மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். தமது சுய அனுபவத்தில் உண்மையான ஒடுக்குமுறையைச் சந்திக்காதவர்களாக இருப்பதனால், இவர்களிடம் உண்மையான உணர்வைக் காணமுடியாது. தமது மத்தியதரவர்க்கச் சிந்தனைக்கேற்பவே செயற்படுவதனால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மீறி இவர்களால் செல்லமுடியாது.

நாளாந்தம் கீழ்மட்டத்தில் பல்வேறு காரணிகளால் தாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கப்படுகின்றோமென அறியாமலேயே பல பெண்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களது குரல்கள் வெளியுலகிற்குக் கேட்பதேயில்லை. தற்போது புத்திஜீவி மட்டத்திலிருந்து கேட்கும் குரல்கள் அடிமட்டத்தில் உள்ள உண்மையான ஒடுக்குமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. உண்மையாக ஒடுக்கப்படுபவர்களின் குரல்கள் ஊமையாக்கப்பட்டிருக்கின்றன. தற்போது உயர்மட்டத்திலிருந்து ஒலிக்கும் குரல்களிலிருந்து உண்மையான நிலையைத் தெளிவாக அறிந்துக் கொள்ள முடியாது.

எமது சமூக அமைப்பில் பெண்கள் நாளாந்தம் நடைமுறை வாழ்க்கையில் பல ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். சமயம், கலாச்சாரம் என்ற ரீதியிலும், சம்பிரதாயங்கள் என்ற போர்வையிலும், வேலையில் சம்பளம், ஒய்வு, என்ற ரூபத்திலும் வருகின்றன. இவர்கள் அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

ஒரு பெண் பிறந்ததிலிருந்து கல்விகற்கும் வரையிலும் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்படுகிறாள். அவளது ஆசாபாசங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. அவள் தனது சுயவிருப்பங்களையல்ல, தன்னைச் சுற்றியுள்ளவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவளாகவே இருக்கின்றாள்.

பிறந்ததிலிருந்து தனது பெற்றோரைத் திருப்திப்படுத்தும் மகளாக, மணமாகிய பின் கணவனுக்கு தனது ஆசாபாசங்களை

www.tamilarangam.net

அடகு வைத்த மனைவியாக, பின் தாயாக இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் அவள் ஸ்தானங்கள் தான் மாற்றப்படுகின்றனவே தவிர , பெண்ணென்ற ரீதியில் அவள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் ஒடுக்குமுறைகள் தொடர்ந்தே வருகின்றன. ஒரு பெண் தான் பிறந்ததிலிருந்து தனக்கு தனது தாயால் போதிக்கப்பட்டவைகளை 'கவனமாக' தனது மகளுக்கும் போதிக்கின்றாள், இவ்வாறு தொடர் சங்கிலியாக ஒடுக்குமுறை தொடருகின்றது. பெண் என்பவள் அடுத்தநாள் தயாரிக்கும் உணவைப்பற்றியும், உடைகள், நகைகள் பற்றியும், மணமாகிய பின் குழந்தையை எவ்வாறு வளர்ப்பது, போன்றவற்றை பற்றி மட்டும்தான் சிந்திக்க வேண்டும் என அவளது வட்டம் குடும்பத்திற்குள்ளேயே குறுக்கப்படுகின்றது. இதற்கு காரணம், அவளது பெற்றோரும், அவர்களைச் சூழ்ந்துள்ள புறச்சூழலுமேயாகும்.

தன் குடும்பத்தைவிட்டு, தனக்கு வெளியில் இருக்கும் உலகத்தை அவளால் பார்க்கமுடியவில்லை. அவள் அந்த வீட்டிலிருந்து வெளியில் வரமுனைவதுமில்லை.

ஒரு பெண் இப்படித்தான் இருக்கவேண்டும், இதுவே நியதி, நமது சமயம், கலாச்சாரம், சம்பிரதாயங்கள் அனைத்தும் இதைத்தான் கூறுகின்றன, என மிக சுலபமாக காரணங்கள் கூறப்பட்டு , அவளது எண்ணங்கள் முழுங்கடிக்கப்படுகின்றன. "பெண்ணாய்ப்பிறந்தால் துன்பத்தை அனுபவித்துதான் ஆக வேண்டும்" என தனக்கு மேலே பணியைச் சுமத்தி, உரிமை

www.tamilarangam.net

யான புறக்காரணிகளை மறந்துவிடுகின்றாள். தனது கையில் மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளை தானே மேன்மேலும் இறுக்கி கொள்கின்றாள். பொதுவாக வீட்டில் தனக்கு இழைக்கப்படும் பலாத்காரங்களையும், கொடுமைகளையும் அவள் தனியாகவே அநுபவித்து, தனது மனச்சுமைகளை தனக்குள்ளே பூட்டிவைத்துக்கொள்கின்றாள். தனது பிரச்சனையை மற்றவர்களுடன் பரிமாற்றிக்கொள்ளகூட விரும்புவதில்லை. அதற்கு அவளைச்சுற்றியுள்ள காரணிகள் இடம் கொடுப்பதில்லை.

இதேவேளை தொழில்செய்யும் பெண்களின் மனநிலை சற்று வித்தியாசமாகவேயிருக்கும். அவர்கள் தினமும் வாழ்க்கைப் போராட்டத்தில் போராடவேண்டிய நிலையுள்ளது. அவர்களது நாளாந்த பிரச்சனையாக சம்பளம், ஓய்வு, இரவுவேலை, பாதுகாப்பு போன்றவை அமைகின்றன. இவர்கள் ஓரளவேனும் வெளிச்சுற்றாடலுடன் தொடர்பு கொள்ளவேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். பெண் என்ற ரீதியிலும், தொழிலாளி என்ற ரீதியிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். ஆனால் அவர்களுக்கும் முழுமையான உணர்வு இருக்குமென்று சொல்வதற்கில்லை. தாங்கள் சேர்ந்திருக்கும் வர்க்கத்தின் உணர்வுகளாகவேயிருக்கும். ஆனால் இவர்களை ஒரு அமைப்புக்குள் இயக்குவது சுலபமாகவிருக்கும்.

எல்லா மட்டங்களிலுள்ள பெண்களும் முதலில் அகச்சிறையிலிருந்து வெளியில் வரவேண்டும். தமது உரிமைகள் என்ன?, மற்றைய பெண்களுக்குள்ள பிரச்சனைகள் என்ன? , என சிந்தித்து

www.tamilarangam.net

தங்களுக்கு தடைக்கற்களாகவிருக்கும் புறச்சூழ்நிலையிலிருந்து வெளியில் வரவேண்டும்....

மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்த புத்திஜீவிகளால் தனித்து விடுதலையைப் பெறமுடியாது. இவர்கள் நடைமுறையில் பிரச்சனைகளை எதிர்நோக்கியிருக்கமாட்டார்கள். நாள்தோறும் ஒடுக்கப்பட்டு, உண்மையான விடிவை வேண்டிநிற்கும் அனைத்து பெண்களும் தமது மனநிலையிலிருந்தும், புறச்சூழ்நிலையிலிருந்தும் முழுமையாக விடுபட்டாலேயே அவர்களால் விடுதலை பெற முடியும். உண்மையான விடுதலையை பெறவேண்டியவர்களின் குரல்கள் மௌனமாக்கப்பட்டுள்ளன. அவை மொழிபெயர்க்கப்பட்டாலே பெண்களின் விடுதலை சாத்தியமாகும்.

---

## பார் எட்டுத் திக்காய்ப், பரந்து கிடப்பது...

உண்மைதான்!
எம்மிடமென்ன பெரிதாய் இருந்தது
காதலும்நட்பும் நிறைந்த உளமும்:
உண்மைமனித இருப்பும் அல்லால்?

நம்முடையகாதலியர் நமைப்பிரிந்து செல்வார்;
ஏளனமாய்ச் சொல்வீசி,
தோழர்களும் போவார்.

இன்னும் மனம்அழிய நாமேன்நின்றபடி?
இவர்களுக்கு அப்பால் மனிதர்க ளிலையா
எனில்லை?
'பார் எட்டுத்திக்காய்ப்,
பரந்து கிடக்கிறதாய்' கவிஞன்* சொன்னன்.

அ. யேசுராசா



* கவிஞன் - மஹாகவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

1

சென்ற இதழில் வெளியான ப.வி.சிறிரங்கனின் "இலங்கைப் பாடத்திட்டம் ஜேர்மனியில் அவசியம்தானா ?" என்ற கட்டுரையில் இலங்கையில் நடைமுறையில் இருக்கும் கல்விமுறைபற்றிக் கூறப்பட்ட சித்தாந்த ரீதியான கருத்துக்கள் சரியான போதிலும், மேற்கு ஜேர்மனியில் உள்ள சிறுவர்களுக்கு தமிழ் கல்வி புகட்டும் முயற்சிகளுக்கு இந்த விமர்சனங்கள் அவசியமற்றவையாகும்.

இங்கு வாழும் சிறுவர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு சிலர் முன்வந்து செய்யும் சேவைகளை "வறட்டுச்சித்தாந்தக் கண்களுடன்" நோக்குவது தவறாகும். இங்குள்ள பலர் பல விதமான சுயநல முயற்சிகளில் ஈடுபட்டிருககையில், தமிழ் மொழியைப் படிபிப்பதற்கு இவர்கள் எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டாமல் விமர்சிப்பது முறையல்ல.

து.பாலசுப்பிரமணியம்
முன்சன்.

2

"ஐரோப்பா வாழ் ஈழத்தமிழர்கள் நவீன—உதிரிவர்க்கமாகிறார்களா?......" என்ற கேள்வி முற்றுப்பெறாத தலையங்கமிட்டு எம் மத்தியிலுள்ள முரண்பாடுகளை ஆய்வுசெய்துள்ளேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது இன்றைய சூழ்நிலையில் அவசியம் கூட. இதில் சுட்டிக்காட்டப்பட்ட தன்மைகளெல்லாம் உண்மையாதலால் பலருக்குக கசப்பாக இருக்கலாம். ஆனால் முழுமையான தெளிவுள்ள மார்க்சிட்டுகளால் வெளிக்கொணரப்படும் சிந்தனைக்கு, இது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல; ஏற்கக்கூடியதொன்றேயென எண்ணுகிறேன். ஒரு சிலரைப்போல் நீங்கள் சுதந்தரமற்ற கருத்துப்பரிமாறல் செய்வதில்லை. எனவே, சுதந்திரமான கருத்துப்பரிமாறல் களமான சிந்தனை யில் இந்தக் கட்டுரைக்குத் தடையிருக்காது என்றே நம்புகிறேன். சில நேரம், சில பத்திரிகைகளைப் போல் "நமது விமர்சனக் குழுவால்" நீங்களும்..... .இருக்கவே இருக்காது! எனவேதான் என் ஆய்வுகளைப் பகிர்ந்து கொள்கிறேன். உங்களாலும் இவ்விதமான ஆய்வுகளை சீரணிக்க முடியாது போனால் தயவு செய்து இவ்வாய்வுக் கட்டுரையை தயைபண்ணி என் கரம் மீண்டும் கிடைக்கப் பண்ணுங்கள். இதில் பாதகமில்லை.

ப.வி.சிறிரங்கன்

நுறன்பேர்க்.

மன்னிப்புக் கோருகின்றோம்

---

இடநெருக்கடி காரணமாக அதிகமான வாசகர்களின் கடிதங்களை

[redacted]

இந்த இதழில் பிரசுரிக்க முடியவில்லை.

சகல கடிதங்களும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

ஆர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பா வாழ் ஈழத்தமிழர்கள் நவீன-உதிரி வர்க்கமாகிறார்களா?

வரலாறு கண்ட யுத்தங்கள் யாவும் வர்க்கங்களுக்கிடையிலான யுத்தமென ஆய்வு செய்த கார்ல் மார்க்ஸ் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை ஆய்வு செய்து மனித சமுதாயத்தில், வகுப்பிழந்து 'யாவும் ஊரே யாவரும் கேளிர்' என்று வாழும் மக்களை உதிரிப்பாட்டாளிகள் கணித்தியம்பினார்.

இன்றைய சூழலில் ஐரோப்பிய வாழ் ஈழத்தமிழரை அவர்களின் புறநிலைகளை வைத்து ஆய்வு செய்யும்போது, உளவியல் ரீதியான செயற்பாடுகளையும் ஒப்புநோக்கும் பண்புடன் ஆய்வை நகர்த்தும் வேளை, உண்மையில் இவர்களை ஒரு சமூகஅமைப்பாக கணிக்க முடியாது. ஒரு சமூகத்திற்குடைய பண்பு, உற்பத்திஉறவுகளுடைய தன்மை பாதிக்கப்பட்ட சூழலில் வாழும் ஈழத்தமிழரை அவர்களுடைய வாழ்வியல் யதார்த்த பண்புகளுடன் நோக்கும்போது ஐரோப்பியவாழ் தமிழரை தற்காலிகமாகக்கூட ஐரோப்பிய வாழ் சமூகமென அழைக்கும் தன்மை பலமிழக்கிறது. இந்நிலையில் இவர்களை இவர்தம் உள புறநிலை யதார்த்தங்களை வைத்து ஆய்வை செய்யும்போது உதிரிப்பாட்டாளி வர்க்கத்தின் தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வடிப்படையில் உதிரிப்பாட்டாளிய வகுப்பைப்பற்றி சற்றுத்தெளிவாக இங்கே காட்டவேண்டியுள்ளது. உதிரிவகுப்பை சற்று ஆய்வுசெய்து விளக்கமளிப்பது இன்றைய ஐரோப்பிய வாழ் தமிழரின் போக்கையும் அவர்களின் அமைப்பியல் ரீதியான நிகழ்வையும் கணிக்க பேருதவியாக இருக்குமென நம்புகிறேன். உதிரி என்று குறிப்பிடுவது ஒரு நாகரீகமான சொற்பிரயோகமாகும். அதை பாமரத்தமிழில் குறிப்பிடுவோமாயின் 'பொறுக்கி' என்று அழைக்கப்படும், என்பதை உய்துணர்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உதிரி வர்க்கம்

மார்க்ஸிய மூலவர்களிடம் உதிரிப்பாட்டாளிய (        ) வகுப்பை பற்றிய விளக்கம் மட்டுமே தெளிவாக இருந்த கருத்தாகும் இந்த கருத்து பின்னனில் சற்று விரிவு பெற்றது. உதிரி முதலாளியவகுப்பென்றும் விரிவுபெற்று கணிக்கப்பட்டது. உதிரிவகுப்பென்னும் கருத்தாக்கத்தை அகலப்படுத்த முயற்சி செய்த மூன்றும் உலகத்தவர் சமூகத்தின் பல்வேறு வகுப்புகளிலிருந்து கழிக்கப்பட்டு அல்லது உதிர்ந்துபோய் வாழ்க்கையின் அடிமட்டத்திலான குப்பையில் கொண்டுபோய் கொட்டப்பட்டு 'கசடுகளாய்' அமைந்துவிட்டமக்கள் தொகுதியை வகுப்பிழந்த பேர்வழிகள் (        ) என்று அழைத்துஆய்வுகளைச் செய்தார்கள். இது ஒரு வகைப் பொது வர்க்கமாகும். அவ்வகையில், இவ்வகுப்பை முழுமையாக விரிவாக ஆய்வு செய்த தமிழ் மார்க்ஸிய அறிஞர்கள் உதிரிப்பாட்டாளிகள், உதிரிமுதலாளிகள், உதிரி அறிவர்கள் என பிரித்து விளக்கியுள்ளார்கள்.

'இவ்விதக் கண்ணோட்டத்துடன் ஐரோப்பிய வாழ்த்தமிழர் உலக நாடுகள் பல உற்று நோக்கும் காலம் எதிர்நோக்கும் சாத்தியக்கூறுகள் நிறைய உண்டு.'

ஐரோப்பிய வாழ் ஈழத்தமிழரின் தனிச்சூழலை தனித்து வைத்து ஆய்வு செய்வது காலத்தேவையாகும். உதாரணங்களை மட்டும் இலங்கை அரசியலை களமாக வைத்து விளக்குகிறேன்.

உதிரிவர்க்கத்தினுடைய பிரிவுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து விபரிப்பதே சாலச்சிறந்ததாகும். முதலில் உதிரிப்பாட்டாளிகளை எடுத்தாராய்வோம். எல்லா நாடுகளிலும் உள்ள தொழில் நகரங்களிலும் மிகப்பெரிய வேலையில்லாத பட்டாளம் ஒன்றிருப்பதை வரலாறு முதல்கொண்டு நோக்கிவருகிறோம். அவர்களில் பலர் ஏதோ வகையில் கெட்டழிந்து உதிரிகளாக தினம் தினம் பல்கிப் பெருகி வருகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளர்கள். முதலாளித்துவத்தில் இது முடிவில்லா ஒரு இயக்கம் என்பதை கார்ல் மார்க்ஸ் சுட்டியுள்ளார். ஆனால் இன்று ஈழத்தின் புறநிலைகளி பாதிப்புக்களாலும், முதலாளித்துவத்தின் சுரண்டலாலும், பாட்டாளிகளின் குட்டிமுதலாளித்துவ பண்புகளாலும், யாழ்ப்பாண மக்களின் சார்பு முதலாளித்துவ போக்காலும் உதிரிவர்க்கத்தின் அடிப்படைப் பண்புகளிலிருந்து சற்று மாறுபட்ட பண்புகளுடனும் அதே நேரம் ஒத்த பண்புகளுடனும் நவீனப் பாட்டாளி வர்க்கமாக ஈழத்தமிழ் மக்கள் ஐரோப்பிய தொழில் நகரங்களில் செறிந்து வாழ உருவாக்கப்பட்டுள்ளார்கள், உருவாகியுள்ளார்கள்.

இந்திய இலங்கை அரசுகளுக்குள் அடங்கிய பெரிய தேசிய இனங்களில் இன்று பார்க்கிற அரசியலே ஒட்டுமொத்தத்தில் உதிரிமயமாகியுள்ளது. அதிலும் பிரேமதாசாவின் இலங்கை அரசுக்கும், தமிழக அரசியலுக்கும் தனிச்சிறப்புண்டு. பிரேமதாசாவினது வீடமைப்புத் திட்டமும், தெருவோர சந்தை வாய்ப்பளிப்பும் சேரிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தால் பிரேமதாசாவே இலங்கை உதிரி வகுப்பின் நெஞ்சில் மேடை கட்டி ஆடுகின்ற தெய்வம். தமிழகத்தில் திரைப் படஉலகம். இந்த உதிரி வகுப்பின் நாற்றமெடுத்த சேரிகளே முதலாளித்துவ கட்சிகளின் வலுவான வாக்கு வங்கிகளாகும். இந்த உதிரி வர்க்கம்அரசியல் மயமாகியுள்ள அளவுகளையும் நீட்டங்களையும் பற்றி சமுதாயவியல் நிபுணர்கள் முறைப்படிகளை ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும்.

உதிரிப்பாட்டாளிய வகுப்பினுடைய பண்பு இரந்துண்பது, முட்டை முடிச்சுத்தூக்கும் நாட்டாண்மைகளாக கரத்தை வைத்து கூலிக்கு மாரடிப்பது (கொழும்பை உற்று நோக்குக) சின்னஞ்சிறு கூலி வேலை செய்து அன்றுடம் வயிறு வளர்ப்பது, பழைய போத்தல், பீக்களைகளை வேண்டி விற்பது, சாக்கு முதலியவற்றை வேண்டிமொத்த வியாபாரிகளுக்கு கொடுத்து கூலி பெறுவது, கடைகளில் பழவகை முதற்கொண்டு மளிகைச்சாமா

www.tamilarangam.net

ன்கள் வரை சுமந்து கூலி விற்பது, குடித்து விட்டு தெருவில் ஆடிக்கொண்டிருப்பது, பெண்கள் விலைமகளிராய் உடலை விற்று பிழைப்பது, அவர்களுக்கு தரகர் (மாமா) வேலை செய்து சிலர் வயிறு வளர்ப்பது, திருடி பிழைப்பது, சிறு குற்றங்கள் செய்து வாழ்வது, பெரிய விடுதிகளின் முன்னால் நின்று தரையில் வீசப்பட்டுள்ள எச்சில் இலைகளை நாய்களோடு போட்டிபோட்டுக் கொண்டு உண்பது, பழைய கடதாசிகள் பொறுக்கி அதை விற்று வரும் சில்லறைகளில் அன்றாடம் சீவிப்பது இப்படி பலவிதமான காரியங்களில் ஈடுபட்டு கெட்டழிந்து வாழும் தன்மையுடைய வாழ்வழியற்றவர்களையே உதிரிப்பாட்டாளிகளென கணிக்கப்பட்டுள்ளது. கெட்டழிந்த நல்ல குடும்பங்களைச் சேர்ந்த நகர கிராம மக்களையும் இதில் அடக்கலாம். ஏனெனில், நிலையான வேலையும், நிலையான வருவாயும் நிலையான வாழ்க்கையும், நல்ல பண்பாட்டு நிலைகளும் இல்லாதது இவர்களின் பொதுப்பண்பாகும் என்பதால் இவர்களும் அடங்குவர்.

மேற்காட்டப்பட்ட உதிரிப்பாட்டாளிகளின் பொதுப்பண்புகளுக்குச் சற்று மாறுபட்ட தன்மையில் ஐரோப்பிய வாழ்த் தமிழர்களில் கணிசமானவர்கள் உதிரிப்பாட்டாளிகளாகியுள்ளனர். இவர்களின் சில பண்புகளை ஆய்வு செய்வோம். பல உயிர்களை கொன்றொழித்து தாமே மட்டும் வாழவெண்ணி, மனித சமுதாயத்திற்கே கேடு செய்யும் போதைப் பொருள்களை தமிழர்கள் ஆணவும் பெண்ணுமாகச் சேர்ந்து கடத்துதல், கடவுச் சீட்டுக்களை மாற்றி நாடு விட்டு நாடு பாய்தல், நாடுக்கு நாடு எல்லை பாயச் செய்து பணம் பெறுதல், தாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களை மீறுதல், நகரத்திற்கு நகரம் பெயர்களை மாற்றி பதிந்து பணம் பெறுவது, குடித்துவிட்டு தெருக்களிலும், ரெயில்வே ஸ்டேசன்களிலும் வெள்ளையின பெண்களுக்காக அலைவது, தாம் வாழும் விடுதிகளில் தினம் குடித்துவிட்டு போதையில் இரவிரவாக சத்தமிட்டு சண்டை போடுவது, நாகரீகமற்றமுறையில் வெள்ளையின மக்களிடம் வறுமையை விளக்கி பிச்சை கேட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பது, படிப்பதற்கு வாய்ப்புக்கள் பல இருந்தும் படிப்பதற்கு முயற்சியின்றி வேலை வேலையென அலைவது, கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து சதா வேலையைப்பற்றியும், நாம்விட்டு நாடு பாய்வதையும் பேசிக்கொண்டிருப்பது, பிரயாணம் செய்யும்போது பச்சையாக டிராம்களிலும், பஸ்களிலும் நாகரீகமற்ற முறையில் சத்தம் செய்து கொண்டு பிரயாணிப்பது இதுபோன்று பல தன்மைகளை நவீன உதிரிப்பாட்டாளிகளுக்கான தன்மைகளாகக் கொள்ளலாம்.

இனி ஐரோப்பிய வாழ் உதிரி முதலாளிகளைப் பார்ப்போம். உதிரிப்பாட்டாளிகளை பற்றி இலகுவாக அவர்களின் புறநிலைப்பண்புகளாலும், செயல்களாலும் இனம் கண்டோம். ஆனல் இவ்வுதிரி முதலாளிகளைப்பற்றித் தெரிவது கடுகளவுதான். வாழ்க்கையில் தரம் கெட்ட உணர்ச்சிகளையும் கேடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கீழான முறையில் பணம் சேர்த்து வருபவர்கள் எல்லோரும் உதிரி முதலாளிகளாவர். கடத்தல் மன்னர்கள், போதைப் பொருள் வியாபாரிகள், மேற்கு நாடுகளில் வாழும் தமிழர்களை ஏமாற்றி பிழைக்கும் 'போடர்' கடத்தும் கடத்தல்காரர், கள்ளக் கடவுச்சீட்டு வியாபாரிகள், இந்தியாவில் இருந்து வரும் மஞ்சள் பத்திரிகைகள் மற்றும் வீடியோ, பல சரக்குச் சாமான்கள் விற்கும் ஆசிய கடைக்காரர் (இவ்விதக்கடைகள் பிரான்ஸில் அதிகம்) மக்களிடம் கீழான உணர்ச்சிகளைத்தூண்டி கலை என்கிற போர்வையில் இந்திய சினிமாக்காரர்களையும், பாட்டுக்காரர்களையும் அவிழ்த்துப் போட்டு ஆடும் நடிகைகளையும் ஐரோப்பிய நாடுகளுக்கு வரவழைத்து தமிழரைச் சுரண்டும் சண்டாளர்கள், சிங்கப்பூரில் இருந்து பவுன் எடுத்து கொள்ளை லாபம் அடிக்கும் தரகர்கள், வியாபாரிகள் இப்படிப்பட்ட வகையைச் சேர்ந்தவர்களெல்லாம் உதிரி குட்டி முதலாளித்துவவகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறலாம்.

www.tamilarangam.net

உதிரிப்பாட்டாளிகளின் ஆதரவை அடிப்படையாகக் கொண்டு உதிரிமுதலாளிகளை நம்பி ஆண்டு கெட்ட கொடுங்கோலர்கள் வரலாற்றில் பல உண்டு. இன்று ஈழத்தமிழ் இயக்கங்களை 'பாவைக்கூட்டத்தில் பொம்மையை ஆட்டுவதுபோல்' திரைமறைவிலிருந்து நம்முடைய உதிரிஇயக்கத் தலைவர்களை ஆட்டிப்படைக்கிறவர்கள் இவர்கள்தாம். இவர்கள் உல்லாசமாக மேற்குலக நாடுகளில் வாழ ஈழத்தில் அவ்வப்போது பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்க வேண்டும். எனவே அவர்கள் அவ்வப்போது சிங்களமக்களைக் கொன்றும், சிங்களராணுவத்தையும் தாக்கியும் இவர்களின் மனங்களை குளிர வைத்துக்கொண்டு இவர்களிடும் பணத்தில் தாம் கோடிகோடியாக.......

இவ்வகையான உதிரிப்பாட்டாளிய வகுப்பு மிகவும் இடையூறானது என கார்ல் மார்க்சும், எங்கெல்சும் கருதி அதைப்பற்றி பொதுவுடமை அறிக்கையில் தெரிவிக்கையில் '..சமூகக் கழிசடையும் பழைய சமூகத்தின் அடிமட்டங்களிலுல் வெளித்தள்ளப்பட்ட செயலற்ற அழுகல் திரட்சியும் ஆகிய ஆபத்தான வர்க்கமாக உதிரி வர்க்கம் இருக்கின்றது. இவை அடித்துச் செல்ல நேரிடலாம், ஆயினும் பிற்போக்கான சூழ்ச்சியில் கைக்கூலிபெறுகின்ற கருவியாக பங்காற்ற வேண்டிய அதனை அதைவிடஅன்னியப்படுத்துவது அதனுடைய வாழ்க்கை நிலையே ஆகும்..' என்று கூறினர்கள். இத்தகைய உதிரி வர்க்கத்தை நம்பியே இன்றைய முதலாளித்துவ ஆட்சிகளும், ஈழத்து பிற்போக்கு இயக்கங்களும் வாழ்கின்றன என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இந்நிலையில் ஐரோப்பிய வாழும் தமிழ் மக்கள் மத்தியில் காகிதப்புரட்சி செய்யும் உதிரி அறிவர்களையும் பார்க்கிறோம்.

உதிரி அறிவர்கள் மிகவும் மங்கலாகத்தான் தெரிவார்கள், ஆனல் அவர்களின் எழுத்துக்களும், வாதங்களும் அவர்களை இனம் காட்டும். இவர்களை ஐரோப்பிய சூழலில் இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதவுணர்வுகளைத்தூண்டுகின்ற வகையில் கீழ்த்தரமாக மக்களின் அறிவை முடக்க எழுதுபவர்களாகவும் மற்றைய பிரிவை மேற்கூறியவர்களின் குட்டி முதலாளித்துவ பின்னணியிலிருந்து வந்து முற்போக்கு முத்திரையை நெற்றியில் குத்திக் கொண்ட 'நவ மார்க்ஸிஸ்டுகள்' என அழைக்கலாம். முதல்பிரிவினர் ஐரோப்பிய வாழ் தமிழ் மக்கள் மத்தியில் கலை, கலாச்சாரம், பண்பாடு என்று பேசியும் புத்தகங்கள், கவிதைத்தொகுப்புக்களும் வெளியிட்டும், கூலிக்கு பிற்போக்கு இயக்கங்களிற்கு பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், இசைக்கலைஞர்களாகவும் இருந்து செயல்பட்டு வருபவர்கள். உதாரணம்; பல பாடல் கசட்டுக்கள் இயக்கங்களின் வெளியீடாக ஐரோப்பிய வாழ்தமிழ் மக்களின் வதிவிடங்களில் உலாவுவதை உற்று நோக்குக. இந்த வகையினர் வயிறு வளர்க்க தங்களின் அறிவாற்றல்களை தடுத்துக் கொள்கின்ற இரக்கத்திற்குரியவர்கள். ஆனால் பெருங்கேடு மக்கள் சமூகத்திற்கு விளைவிக்கின்றவர்கள்.

இரண்டாவது பிரிவினர் தாம் அரைகுறையாக பொறுக்கி எடுத்துக் கொண்டவற்றை மெல்லாமல் விழுங்கிவிட்டு அவற்றை செரிக்க்முடியாமல் அப்படியே கக்கிவைப்பவர்கள். இவ்வகையினர் மார்க்ஸிய லெனிய அடிப்படைக்கே எதிராக தாங்கள் கொண்டதே முற்போக்கு கோலமென்று கூறித்திரிபவர்கள். இவர்கள் இருத்திலியல் (                ) என்னும் கட்டமைப்பியல் (                ) என்னும் சொல்லி ஒரு தலையான 'அகவய' துறைக்கோட்பாட்டுக்குள் தலையை புகுத்துபவர்கள். இவர்களை இணைக்கின்ற பாலம் தமிழின எதிர்ப்பு. அதாவது தமிழீழ விடுதலை உணர்வையும், தமிழ் உணர்வையும் அழிப்பதையே வெறியாகக் கொண்டு எழுதுபவர்கள் இந்த உதிரி அறிவர்கள். பண்பாட்டு வேர் இல்லாமல் பிறபண்பாட்டில் மயங்கி தடுமாறுகின்ற இவர்கள் தமது எழுத்தின் மூலம் சிங்கள முற்போக்கு இயக்கங்களுடன் ஒன்றிணைந்து வர்க்கப்போராட்டத்தை முன்னெடுப்போம் என்று சூழுரைப்பவர்கள். தமிழ்த்தேசிய வாதம், தமிழுணர்வு, தே

www.tamilarangam.net

சிய விடுதலை யாவும் வர்க்கப்போராட்டத்தை மழுங்கடிப்பதாகக் கூறி தங்கள் அறியாமையை வெளிப்படுத்தும் அப்பாவிகள். இந்த உதிரி அறிஞர்கள். தமிழினத்தையே காட்டிக்கொடுக்கின்ற கடமையின் வடிவங்களாவர். . இவர்கள் பூப்பதுமில்லை, காய்ப்பதுமில்லை.

இந்த உதிரி அறிவர்களுக்கு மார்க்ஸியத்தை ஒரு முழுமையான விஞ்ஞான முடிவாக எடுத்துப் பேசியும் எழுதியும் வருவது ஒரு நல்ல சாக்குப்போக்காக உள்ளது. நாடு, மொழி, இடம் பொழுது பாராமல் 'உலகப்பாட்டாளிகளே ஒன்று படுங்கள் என்று பயனின்றி எழுதுவதே இந்த உதிரிஅறிவர்களுக்கு முற்போக்கு முக்காடாக இருக்கின்றது. தமிழ்தேசிய விடுதலையிலும், தமிழ்பற்றிலும் ஒன்றுமேயில்லை என்று சொல்லி 'வானத்தில் ஊஞ்சல் கட்டுவோம், காற்றினிலே கப்பல் விடுவோம் என்று வீராப்புப் பேசுகின்ற உதிரிக் கற்பனையாளர்கள் இவர்கள். இவர்களுக்கு ஐரோப்பிய நாடுகள் நல்ல களமாகிவிட்டன. இவர்கள் மார்க்ஸியத்தை ஒருவிதமான முழுமையான விஞ்ஞான முடிவாகவும் அல்லது நெகிழ்வு சுளிவற்ற மாறுத விஞ்ஞான தத்துவமாகவும் எதிர்பார்க்கின்றனர். ஏனைய அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளுடன், விஞ்ஞான வடிவத்துடன் மார்க்ஸியத்திற்குள்ள தொடர்பை பற்றிய அக்கறை எதுமின்றி தங்களுடைய சந்தேகங்களைத் தீர்க்கும் கேள்விகளுக்கெல்லாம் கம்பியூட்டர் போன்றுபட்பட்டென்று பதிலை அப்படியே தந்து விடவேண்டுமென்று எதிர்பார்ப்புடன் அன்றாடம் காய்ச்சியாக பேசி வருகிறார்கள். எழுதி வருகிறார்கள். இவர்களுடைய நோக்கம் எப்படியும் தங்களது பெயர் 'அறிவுஜீவி' என்றோ அல்லது பெரிய சிந்தனையாளர் என்றோ மக்கள் மத்தியில் அடிபட வேண்டும் என்பதே, இவர்களின் முதல்பிரிவினரோ இவர்களுக்கு எதிர் மறையாக எழுதுவார்கள். எல்லாமே பழமையிலுண்டு, புதிதாக எதுவும் செய்ய வேண்டியதில்லை, மார்க்ஸிய லெனிசமா? அது கீதை, திருக்குறள், பைபிளில் ஏற்கனவே சொல்லியாயிற்று என்று பேசி வருகிறார்கள். இன்னும் ஒருபடி மேலே சென்று 'தாவீ

www.tamilarangam.net

பென்னறக்கு வேலி' என்று எழுதுவார்கள், இப்படி பல......

இந்த வகையில் இவர்களைப்பற்றி ஆய்வு செய்து பெரிதாகப் பேசுவது இவர்களுக்கு தேவையில்லாத விளம்பரமாகி விடும். ஏனெனில் இவர்கள் விரும்புவதெல்லாம் ஏதோ ஒரு வகையில் விளம்பரம்தான். ஐரோப்பிய வாழ் தமிழர்களின் எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கும் போது பாட்டாளிய மக்களின் விடுதலைக்கு இவர்களின் பங்கு எப்படி அமையும் என்று நோக்கும்போது ஐரோப்பிய வாழ் ஈழத்தமிழ் மக்களின் தற்போதைய குணாம்சத்தை அறிய வேண்டிய நிலையில் இங்கு வாழும் தமிழ் மக்களின் கணிசமான பகுதி நவீன உதிரி வர்க்கமாகி விட்டதை சுட்டிக்காட்ட வேண்டிய நிலை உருவாகிறது.

எனவே மேற்குலகில் வாழும் ஈழமக்களில் கணிசமான பகுதி மக்கள் இந்நிலையை எட்டிவிட்டார்கள். என்பது உண்மை. இவர்களிடம் இருந்து உண்மையான பாட்டாளிய மக்களை இனம் கண்டு அவர்தம் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் எழுத்துக்கள், கருத்துக்களை உடைத்தெறியவேண்டிய நிலையில் ஒவ்வொரு உண்மையான எழுத்தாளரும் இருக்கின்றார்.

இப்படியான முரண்பாட்டுக்குள்ளேயே ஐரோப்பிய வாழ் ஈழத் தமிழ் சமூகம் தத்தளிக்கின்றது. இதனால் பல நல்ல இளைஞர்கள் நாட்டையும், மொழியையும், மார்க்சிய விளக்கத்தையும், விடுதலையையும் மறந்து வழி தவறி விரக்தியில் செல்லும் போக்கை தோற்றுவிப்பதற்கு தெரிந்தோ தெரியாமலோ தாங்கள் உடந்தையாக இருப்பதை அந்த நவீன மார்க்சியர்கள் உணரமாட்டார்களா?

இவ்விதமான உதிரிவர்க்க மூன்று பிரிவும் 'காற்றடிக்கும்போது காற்றின் பக்கமும், வெள்ளம் ஓடும்போதும் வெள்ளத்தின் பக்கமும் சாயும் நாணற் புல்' போன்றவர்கள். இவர்களையெல்லாம் சேர்த்து ஐரோப்பிய தமிழ் சமூகம் என்று அழைக்கும்போது கணிசமான இவர்களின் குண இயல்புகளையும் வைத்து எல்லா மக்களையும் எடைபோடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையை தெளிவு பெறவேண்டும், இங்குள்ள முற்போக்கு சஞ்சிகையாளர்களும், எழுத்தாளர்களும்.

– ப. வி. ஸ்ரீரங்கன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாளை நம் தேசத்தெருக்களிலே...

ஒரு நாள் உழைப்புக்கும்
ஒரு வேளை உணவுக்கும்
வானத்தை வையகத்தை
கையேந்தி நிற்பவர்கள்
ஏழை எளியவர்கள்
கூலி பெற்று
கூழ் கஞ்சி குடிக்கவென்று
கடைக்கு வெளிக்கிட்டால்
கர்த்தால் கதவடைப்பு
கண்டு கேட்டறியா
கனரகங்கள்
இன்று நேற்று வந்ததுகள்
இடுப்புகளில் தொங்கும்
இடிபோன்ற ஓசை
அடிவயிறுறைக்கலக்கும்
படியென்றால் எப்படி?
ஏன் என்றால் எடு துவக்கு
யார் என்றால் மூச்சில்லை,
தலை சரிய
மனிதமலையொன்று
நிலைதளர்ந்து
கழுத்தில் பட்டை தொங்க
எழுத்தில் மூன்றைத்தூக்கி
உறவு சொல்லா உருவமென
உரிமை மறுக்கப்பட்டு
அனுதையாய்
வாலாற்றுக் கலாச்சாரங்களும்
வர்ணச்சிரம தர்மங்களும்
பிச்சை எடுக்க
வதந்தியிலே மிதந்து

வரும் சுகம்
வல்லோரின் ஆட்சியிலே
வறியோரும் வழியற்றோரும்
பகல் முழுக்கப் பார்வைக்கு
இரவோடு இரவாக இழுத்து
எரியூட்டி கருவாடா
கட்டையின்றி எந்த
கட்டைகளே காண்பீர்
மேலும் இந்த நிலை நீடித்தால்
நாளை
நம் தேசத்தெருக்களிலே...?

— படை

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை இதழ்களைத்

தொடர்ச்சியாகப்

பெறுவதற்கு நீங்கள்

செலுத்த வேண்டிய

அன்பளிப்பு

20 டி.எம்.

மட்டுமேயாகும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்